# செயலாற்றுகை அறிக்கை

# நீதி அமைச்சு

## 2015 சனவரி - டிசம்பர்


மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி
கொழும்பு 12

இணையத்தளம்: www.justiceministry.gov.lk

கௌரவ நீதி அமைச்சர்

கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ

கௌரவ நீதி பிரதி அமைச்சர்

சாரதி துஷ்மந்த, சட்டத்தரணி

நீதி அமைச்சின் செயலாளர்

திரு. பத்மசிறி ஜயமான்ன

# உள்ளடக்கம்

| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| | **பகுதி I** | |


| | | |
|---|---|---|
| 1. | நோக்கு மற்றும் செயற்பணிகள் | 03 |
| 2. | நீதி அமைச்சின் பணிகள் | 04 |
| 3. | அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் | 05 |
| 4. | அமைச்சினது பிரிவுகளின் பணிகள் | 07 |
| 5. | நீதி அமைச்சின் செயலாற்றுகை | 0 8 |
| 5.1 | சட்டப்பிரிவு | 08 |
| 5.2 | நிருவாக மற்றும் தாபனப் பிரிவு | 16 |
| 5.3 | கணக்குகள் பிரிவு | 19 |
| 5.4 | உட்கட்டமைப்பு பிரிவு | 20 |
| 5.5 | அபிவிருத்தி பிரிவு | 24 |
| 5.6. | திட்டமிடற் பிரிவு | 24 |
| 5.7. | உள்ளக கணக்காய்வு பிரிவு | 25 |
| 6. | அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை | 26 |
| 6.1 | சட்டமா அதிபர் திணைக்களம் | 26 |
| 6.2 | சட்டவரைஞர் திணைக்களம் | 28 |
| 6.3 | சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 30 |
| 6.4 | அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 31 |
| 6.5 | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | 33 |
| 6.6 | கடன் இணக்க சபை திணைக்களம் | 36 |
| 6.7 | சட்ட உதவி ஆணைக்குழு | 38 |
| 6.8 | மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | 40 |
| 6.9 | தொழில் நியாயசபைகள் செயலாளர் அலுவலகம் | 43 |
| 6.10 | நீதித்துறை அல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம் | 44 |
| 6.11 | மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை | 45 |
| 7. | நீதிமன்றங்கள் | 47 |
| 7.1 | உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 47 |
| 7.2 | மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 49 |
| 7.3 | காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும் | 50 |
| 8 | தொடர்புடைய நிறுவனங்கள் | 51 |
| 8.1 | இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | 51 |
| 8.2 | இலங்கை சட்டக்கல்லூரி | 53 |

## நீதி அமைச்சு

### நோக்கு

- நீதி நிருவாகத்தின் வினைத்திறமையான நடைமுறை;
- புவியியல் ரீதியான முன்னேற்றங்களுக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவாறு சமுதாய தேவைகளுக்கேற்ப சட்டத்தை மறுசீரமைத்தல்.


### செயற்பணிகள்

- வினைத்திறமையும் அர்த்தமுள்ளதுமான நீதி நிருவாகத்திற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்;
- பிரசைகளின் உரிமைகளை அங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக சட்டத்தை மறுசீரமைத்தல்.


## 02. நீதி அமைச்சின் பணிகள்

- நீதி நிருவாகத்திற்கான பொறிமுறை தொடர்பிலான கொள்கைகளையும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.
- குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.
- அரசியலமைப்பின் மூலம் வேறு ஒரு நிறுவனத்திற்கும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பிலான அலுவல்கள்.
- சமூகத்தின் தேவையையும் சர்வதேசத்தின் போக்கினையும் கருத்திற் கெண்டு சட்ட முறைமையில் மறுசீரமைப்பை செயற்படுத்தல்.
- நீதிமன்ற முறைமைக்குள் நீதி நிருவாகத்தில் தாமதங்களைத் தடுத்தல் உட்பட ஒட்டுமொத்த நிருவாகம் தொடர்பாக எல்லா விடயங்களையும் முறையாகவும் செயற்திறனுடனும் செயற்படுத்தல்.
- அரசாங்கத்தின் சார்பாக குற்றவியல் வழக்குகளைத் தொடுத்தலும் குடியியல் சட்ட நடவடிக்கைகளும்.
- அரசாங்கத்திற்கும் எல்லா அரச திணைக்களங்களுக்கும் சட்ட ஆலோசனை வழங்கல்
- சட்ட வரைவு
- யாதேனுமொரு தவறாளி மீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையை மாற்றீடு செய்தல், தணித்தல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் ஆலோசனை வழங்கல்.
- ஒட்டுமொத்த காதி நீதிமன்ற முறைமையின் பயனுறுதியையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
- தொழில் நியாயசபைகளை நிருவகித்தலும் அது தொடர்பான ஏனைய அலுவல்களும்..
- சட்டங்களை ஆவணப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும் கோவைப்படுத்தலும்.
- சட்டச் சொற்றொகுதிகளை தயாரித்தல்.
- சட்ட அறிக்கைகளை வெளியிடல்.
- அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள்/ நிறுவனங்களைக் கண்காணித்தலும் இத் திணைக்களங்கள்/ நிறுவனங்களின் கீழ் வரும் ஏனைய எல்லா விடயங்களும்.

## 03. நீதி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்



# நீதி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்



## 04. அமைச்சினது பிரிவுகளின் பணிகள்

- அமைச்சின் பணிகள் பின்வரும் பிரிவுகளினூடாக அமுல்படுத்தப்படுகின்றன:

i. சட்டப்பிரிவு
ii. நிருவாக / தாபனப்பிரிவு
iii. கணக்குகள் பிரிவு
iv. உட்கட்டமைப்புப்பிரிவு
v. அபிவிருத்தி பிரிவு
vi. திட்டமிடற்பிரிவு
*vii.* உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு

I. **சட்டப்பிரிவு**

நீதி நிர்வாகத்திற்கு ஏற்புடைய சட்டங்களுக்கான கொள்கைகளை தயார் செய்தல், சட்ட அறிக்கைகளை வெளியிடல் மற்றும் சட்ட உதவிகளை வழங்கல். குற்றவியல், குடியியல், மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர உதவி மற்றும் சர்வதேச ரீதியில் பிள்ளைகளைக் கடத்தலில் குடியியல் சம்பந்தமான விடயங்கள் போன்றவற்றில் மத்திய அதிகாரியாக இருத்தல். தண்டனை விதிக்கப்பட்ட நபர்களை மாறுதலின் கீழ் மறியற்காரர்களை ஒப்படைத்தல், சட்டவாக்கத்தயாரிப்பு பற்றிய அமைச்சரவைத் துணைக் குழு மற்றும் மன்னிப்பு வழங்கப் பரிந்துரைத்தல்.

II. **நிருவாக / தாபனப்பிரிவு**

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க அலுவலர்களைத் தவிர்ந்த அமைச்சினதும் திணைக்களங்களினதும் அலுவலர்களின் தாபன அலுவல்கள்.

III. **கணக்குகள் பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் நிதித்திட்டமிடலும் முகாமைத்துவமும் நிதிக்கட்டுப்பாடும்

IV **உட்கட்டமைப்புப்பிரிவு**

நீதிமன்றங்கள், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்கள், தொழில் நியாய சபைகள், மற்றும் அமைச்சின் ஏனைய கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் அவற்றிற்கு பகுதிகளை சேர்த்தலும் மேம்படுத்தலும்.

V **அபிவிருத்தி பிரிவு**

அபிவிருத்தி பிரிவானது நீதி அமைச்சினதும் அதன் கீழ் வரும் திணைக்களங்களினதும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்கின்றது.

.

VI. **திட்டமிடற்பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் கருத்திட்டங்களை திட்டமிடலும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் சீரமைத்தலும்.

VII. **உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு**

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினதும் நீதிமன்றங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு.

# 05. நீதி அமைச்சின் செயலாற்றுகை

## 5.1 சட்டப்பிரிவு

2015 டிசம்பர் 31ம் திகதி வரை சட்டப்பிரிவினால் பின்வரும் சட்டமூலங்களும் சட்டத் திருத்தங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. **சிறுவர் (நீதிமுறை பாதுகாப்பு) சட்டமூலம்**
   இச் சட்டமூலத்தின் மூலம் பிள்ளை பாதுகாப்பு தொடர்பில் தற்காலத்திற்கு ஏற்றவாறு ஏற்பாடுகளைச் செய்வதுடன் சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டத்தை நீக்கிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் நீதிமன்றம், பொலிஸ் திணைக்களம், மற்றும் நன்நடத்தை திணைக்களம்த்திற்குமிடையே ஒத்துழைப்பை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பிள்ளையின் உயரிய நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சட்டமாஅதிபரின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை உள்ளடக்கிய வரைவு ஒன்று தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதுடன் மேலும் பிரேரணைகள் கலந்தாராயப்படவுள்ளன.

2. **காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**
   இச் சட்டமூலத்தால் காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளால் 1983 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதிக்குள் அநீதிக்கு உட்பட்ட ஆட்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இச் சட்டமூலம் 2016 ஏப்பிரல் மாதம் 06ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

3. **ஆபாசமான வெளியீடுகள் சட்டமூலம்**
   கணனிக் குற்ற சட்டமூலத்தில் கணனி மூலம் புரியப்படுகின்ற பிள்ளைகள் தொடர்பான ஆபாசமான காட்சிகள் சம்பந்தப்பட்ட பகுதியை நீக்கப்பட்டது. இதனை புதிய ஆபாசமான வெளியீடுகள் சட்டமூலத்தில் உள்ளடக்க எதிர்பார்க்கப்பட்டது. இச் சட்டமூலம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டபோது அங்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முகவரின் (ICTA) கருத்து ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

4. **குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**
   இச் சட்டமூலம் குறிப்பிட்ட சில குற்றங்களுக்கு நீடித்த தடுப்பு காவலுக்கு ஏற்பாடு செய்கிறது. இது பாராளுமன்றத்தினல் 2013.01.22 ல் (2013ம் ஆண்டின் 2ம் இலக்க சட்டம்). இதற்கான கட்டளை 2015 மார்ச் 19ம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

5. **1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் திருத்தம்**
   தேசிய மனித உரிமைகள் தொழிற்பாட்டுத் திட்டத்தால் செய்யப்பட்ட சில விதப்புரைகளை செயற்படுத்தும் பொருட்டு இச்சட்டமூலம் வரையப்பட்டுள்ளது.

6. **இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம்**
   தேசிய மனித உரிமைகள் தொழிற்பாட்டுத் திட்டத்தால் செய்யப்பட்ட சில விதப்புரைகளை செயற்படுத்தும்பொருட்டு இச்சட்டமூலம் வரையப்பட்டுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவும் வரைவு சட்டமூலம் ஒன்றை சமர்ப்பித்துள்ளது. இரண்டு வரைபுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

7. **குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்தும் சட்டமூலம்**
   குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்கள் ஆகிய இரு சாராருக்கும் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இச் சட்டம் செய்கிறது. இவ்வாண்டு பாராளுமன்றத்தால் இச் சட்டம் 2015ம் ஆண்டின் 4ம் இலக்க சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

8. **நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம்**
மோசடியான காணி கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றதனால் நொத்தாரிசு கட்டளைச்சட்டம் திருத்தஞ் செய்யப்படவுள்ளது. உறுதியில் கையொப்பமிடும்போது உயிரியல் கையொப்பங்களை பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் மோசடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச் சட்டமூலமானது அமைச்சரவை சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. இவ் விடயத்திற்கு பொறுப்பான பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு இச் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

9. **முஸ்லிம் விவாக, மணநீக்கச் (திருத்தச்) சட்டமூலம்**
கௌரவ நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் முஸ்லிம் விவாக, மணநீக்க (திருத்தம்) சட்டம் பற்றி கலந்தாலோசனை செய்யப்பட்டு வரைவு தயார் செய்யப்படுகிறது.

10. **சிறைச்சாலைகள் நிருவாக சட்டமூலம்**
இச் சட்டமூலம் சிறைச்சாலை நிருவாகம் தொடர்பில் புதிய நிருவாக முறையொன்றை வழங்குகிறது. சிறைச்சாலை அதிகாரிகளால் சில திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டன. அத் திருத்தங்கள் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில ஆலோசனைகளும் இச் சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போது இவ் விடயம் சிறைச்சலைகள் மறுசீரமைப்பு அமைச்சின்கீழ் வருவதால் அவ்வமைச்சுக்கு இச் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

11. **குடியியல் வழக்கு நடவடிக்கைகளின்போது பெற்றோர் தன்மையைப் பரீட்சித்துப் பார்க்கும் சட்டமூலம்**
இச் சட்டமூலத்தால் தாயை அல்லது தந்தையை இனங்காண்பதற்கு டீ.என்.ஏ. பரிசோதனைக்காக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இச்சட்டமூலம் பிள்ளைகளின் பொறுப்பு, பராமரிப்பு, மற்றும் மரபுரிமை போன்ற விடயங்கள் தொடர்பில் மிகவும் உதவியாக உள்ளது. இச் சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையால் அது பிற்போடப்பட்டுள்ளது..

12. **குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (முன் விசாரணை / நடவடிக்கைகள்) சட்டமூலம்**
சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவினால் இச் சட்டமூலம் பரிசீலிக்கப்பட்டது.
உபகுழுவின் பரிந்துரைகள் இச் சட்ட மூலத்தில் சேர்க்கப்பட்டது. இச் சட்ட மூலத்தின் இறுதி வரைவு சட்டவரைஞர் திணைக்களத்திடமிருந்நது கிடைக்கப்பெற்றுள்ளது.

13. **வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்களை பரஸ்பரம் அமுல்படுத்தல்**
சட்ட ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்ட வரைவுச் சட்டமூலம் பரிசீலிக்கப்படுகிறது.

14. **நீதிமன்ற அவமதிப்பு சட்டமூலம்**
இச்சட்டமூலம் பரிசீலிக்கப்படுகிறது.

15. **அற்றோனித் தத்துவ (திருத்தச்) சட்டமூலம்**
மோசடியைத் தடுப்பதற்கு இந்த சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்படுகிறது. குழுவினால் வரைவு தயாரிக்கப்பட்டு கௌரவ நீதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.

16. **குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான (திருத்தச்) சட்டமூலம்**
குறிப்பிட்ட குற்றங்களை அட்டவணையில் சேர்ப்பதற்காக வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இச் சட்டமூலம் தற்போது சட்டவரைஞரிடம் உள்ளது.

**17. குற்றவியல் நடைமுறை (திருத்தச்) சட்டமூலம்**

நீதிமன்ற சாட்சிப்பொருட்களை அகற்றுவதற்காக வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 2015 டிசம்பர் 3ம் திகதி சட்டமா அதிபரின் அவதானிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது

**18. நாடோடிகள் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்ளைச் செய்தல்**

இவ்விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு சமூக சேவைகள் அமைச்சு என்பதனால் வரைவு தயாரிக்கப்பட்டு அவ்வமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**19. மதுவரி கட்டளைச் சட்டம்**

பொலிசாரும் இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் செயற்படுவதற்கு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் திருத்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அமைச்சினால் வேறு ஒரு திருத்தம் சட்டவரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**20. மத மற்றும் இனவாத உணர்வுகளைத் தூண்டும் விடயங்களை குற்றமாக்கும் பொருட்டு தண்டனைச் சட்டகோவையின் திருத்தம் செய்தல்**.

பாராளுமன்றத்தில் எதிர்ப்பு காரணமாக இச் சட்டமூலம் வாபஸ் பெறவேண்டி ஏற்பட்டது.

**21. பயங்கரவாத தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குதல்**

சட்ட ஆணைக்குழுவினால் வரைவு ஒன்று அனுப்பப்பட்டது. இவ் விடயத்துக்கு பாதுகாப்பு அமைச்சு பொறுப்பாகவுள்ளதால் இவ்வரைவு அவ்வமைச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**22. அங்கவீன உரிமைகள் வரைவு சட்டமூலம் 2015**

இச் சட்டமூலம் சட்ட ஆணைக்குழுவின் பரிசீலணையிலுள்ளது

**23. பிரிவிடுதல் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தம்**

"பரவேணி நிலகாரயா" ஒருவருக்கு அப் பங்கை பிரிவிடுதல் செய்வதற்கு அல்லது அப் பங்கை அல்லது அப் பங்கின் ஏந்த நிலத்தையும் விற்பதற்கான உருமையை உள்ளடக்குவதற்கும் முன்மொழியப்பட்ட திருத்தம் நிலுவையிலுள்ள எல்லா வழக்குகளையும் உள்ளடக்கும் வகையிலும் பிரிவிடுதல் சட்டத்தில் திருத்தம் செய்தல்.

**24. மீளப்பெறமுடியாத நன்கொடை உறுதிகளை மிளப்பெறல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் கட்டளையின் பிரகாரம் மாத்திரமே மீளப்பெறமுடியாத நன்கொடை உறுதிகளை மிளப்பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறது. இது 2015 நவம்பர் மாதம் 4ம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவையின் அங்கிகாரத்திற்கெற்ப 2015 நவம்பர் மாதம் 24ம் திகதி சட்டவரைஞர் திணைக்களத்திற்கு வரைவு ஒன்று அனுப்பப்பட்டது.

**ஏனைய பணிகள்**

- இலங்கை சட்ட அறிக்கைகளை அச்சிடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் இலங்கை உயர் நீதிமன்றம் வழங்கிய முக்கிய தீர்ப்புகளை உள்ளடக்கிய இரண்டு தொகுதிகள் ஒவ்வொரு வருடமும் அச்சிடப்படுகின்றன.

- **2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சர்வதேச பிள்ளை ஆட்கடத்தல் சட்டம்**

2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பிள்ளை ஆட்கடத்தல் தொடர்பாக 52 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் பெருமளவிலான விண்ணப்பங்கள் வழக்குத்தொடுத்தலின்றி முடித்துக் கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இச் சட்டத்தின்கீழ் மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யப்பானிலிருந்து மேன்முறையீடொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இது சம்பந்தமாக சுயவிருப்பத்துடன் திருப்பி அனுப்புவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

- **தவறாளர்களை ஒப்படைத்தல்**

இலங்கையினுள் தவறொன்றைப் புரிந்து தவறாளராகிய வேறொரு நாட்டின் பிரசையொருவரை அந்நாட்டிற்கு ஒப்படைத்தல் மற்றும் வேறொரு நாட்டில் தவறாளராகிய இலங்கைப் பிரசை ஒருவரை இலங்கைக்கு ஒப்டைத்தல் தொடர்பான ஏற்பாடுகள் 1995ம் ஆண்டின் 5ம் இலக்கச் சட்டத்தால்

அமுல்படுத்தப்படுகிறது. அதன்படி 23 இந்திய தவறாளர்கள், 50 பாகிஸ்தான் தவறாளர்கள் மற்றும் மாலைதீவு தவறாளர் ஒருவரும் அந்நாடுகளுக்கு ஒப்டைக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய இராச்சியத்தில் தவறாளர்களாகிய இலங்கையர் இருவர் அவர்களது சிறைத்தண்டனயை செயற்படுத்துவதற்காக இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையிடம் ஒப்டைக்கப்பட்டுள்ளனர். இலங்கையிலிருந்து இரு இந்நியப் பிரஜைகளை ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கத்திடமிருந்து வேண்டுகோளொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. மாலைதீவிலிருந்து 10 இலங்கைத் தவறாளர்களை வருங்காலத்தில் இலங்கையிடம் ஒப்படைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

இலங்கை மற்றும் வியட்நாம் அரசுகளுக்கிடயே சிறைச்சாலை பரிமாற்ற ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

2015 மே 28ம் திகதி ரஷ்யாவுடன் தவறாளர்களை ஒப்படைப்பதற்கான உடன்பாடொன்று கௌரவ நீதி அமைச்சரால் கையளித்திடப்பட்டது. மிக விரைவில் உக்ரேயின் அரசாங்கத்துடன் உடன்படிக்கையொன்றை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

- **சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையம்**

இலங்கையில் முதலாவது சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையத்தை தாபிக்கப்போவதாக 2011 டிசம்பர் மாதத்தில் நீதி அமைச்சால் அறிவிக்கப்பட்டது. இந் நிலையத்தின் மூலம் ஏதேனுமொரு வர்த்தகப் பிணக்குகளை தீர்ப்பதற்காக சர்வதேச கம்பனிகளுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். இலங்கையை இவ் வலயத்தில் அமைந்துள்ள சர்வதேச நடுத்தீர்ப்பு மையமாக்குவதே அரசாங்கத்தினது எதிர்பார்ப்பாகும். இக் கருத்திட்டத்திற்காக நீதி அமைச்சினால் ஆரம்பத்தில் 100 மில்லியன் ரூபா தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. உலக வர்த்தக நிலையமானது வர்த்தக மையத்தின் மத்தியில் அமைந்திருப்பதாலும் சர்வதேச நடுத்திர்ப்புக்குத் தேவையான ஏனைய வசதிகளான நட்சத்திர ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உல்லாசப் பயணிகளைக் கவரும் கவர்ச்சிகரமான இடங்களுக்கு மிகவும் அண்மையில் உள்ளதாலும் உலக வர்த்தக நிலையத்தின் 22 ஆம் மாடி தற்போது சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையமாகத் தயார்செய்யப்பட்டுள்ளது.

2015 மே மாதம் இந் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந் நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக கம்பனியொன்றை அமைத்துக்கொள்வதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கம்பனியின் அமைப்பு அகவிதிகள் தயாரிக்கப்படுகின்றன. நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நடுத்தீர்ப்புப்பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், நடுத்தீர்ப்பாளர்களை பயிற்றுவித்தல் போன்ற நடுத்தீர்ப்புடன் சார்ந்த செயற்பாடுகளுக்காக நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

- **வெளிநாடுகளிலுள்ள எதிராளிகளுக்குக் கையளிப்பதற்கு இலங்கையின் நீதிமன்றங்களால் வழங்கப்படுகின்ற அழைப்பாணைகள் பற்றிய விபரம்**

2000 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களின் போது பரஸ்பர ஒத்துழைப்பு பற்றிய சட்டத்திற்கமைவாக, 2015 ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் இலங்கை நீதிமன்றங்களிலிருந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு 399 வெளிநாட்டு அழைப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| நாடுகள் | வழங்கப்பட்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை | நாடுகள் | வழங்கப்பட்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 22 | மலேசியா | 06 |
| பஹரேன் | 04 | மாலைதீவு | 03 |
| வங்களாதேஸ் | 01 | மால்டா | 03 |
| கனடா | 23 | மொரிஷியஸ் | 03 |
| சைனா | 05 | நெதர்லாந்து | 01 |

| | | | |
|---|---|---|---|
| சைப்ரஸ் | 04 | நியூசிலாந்து | 01 |
| டென்மார்க் | 01 | நோர்வே | 03 |
| தோகா கட்டார் | 22 | ஓமான் | 01 |
| பின்லாந்து | 01 | பாக்கிஸ்தான் | 03 |
| பிரான்ஸ் | 16 | பிலிப்பைன்ஸ் | 02 |
| ஜேர்மனி | 09 | ரஷ்யா | 04 |
| இந்தியா | 14 | சிஷெல்ஸ் | 02 |
| இந்தோனேசியா | 02 | சிங்கப்பூர் | 08 |
| அயர்லாந்து | 01 | ஸ்பெயின் | 02 |
| இஸ்ரேல் | 10 | சுவீடன் | 04 |
| இத்தாலி | 59 | சுவிற்ஸர்லாந்து | 04 |
| யப்பான் | 06 | ஐக்கிய அரபு எமிரேட்டு | 22 |
| யோர்தான் | 06 | ஐக்கிய இராச்சியம் | 54 |
| கொரியா | 09 | ஐக்கிய அமெரிக்கா | 21 |
| சவூதி அரேபியா | 25 | வியட்நாம் | 01 |
| குவைத் | 11 | | |

- **குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்பர சட்ட உதவி தொடர்பான உடன்படிக்கை**

இலங்கைக்கும் பெலாரஸிற்குமிடையிலான குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்பர சட்ட உதவி சம்பந்தமான உடன்படிக்கையானது இரு தரப்பினருக்கும் விசாரணைகள், வழக்குகள், விளக்கங்கள் மற்றும் அதன் விளைவான நடவடிக்கைகள் உட்பட குற்றவியல் நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் பரஸ்பர சட்ட உதவியை வழங்குகிறது. இலங்கையின் நீதி அமைச்சுக்கும் பெலாரஸ் குடியரசின் நீதி அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம் இரு தரப்பினருக்கிடையே அவர்களின் சட்ட முறைகள், நிறுவனங்கள் மற்றும் சட்டவாக்கம் என்பவற்றை விருத்தி செய்தல் சம்பந்தமான பிரச்சினைகளில் இரு தரப்பினருக்கும் நன்மை ஏற்படும் வகையிலும் அந்தந்த நாடுகளின் சட்டங்கள் மற்றும் அந்தந்த அரசுகள் ஏற்று அல்லது கையெழுத்திட்டுள்ள சர்வதேச ஒப்பந்தங்களுக்கமைய ஒரு சட்ட கட்டமைப்பை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

2014 ஆம் ஆண்டினல் சைனா, பெலாரஸ், ஐக்கிய அரபு எமிரேற் ஆகிய நாடுகளுடன் இலங்கை குற்றவியல் நடவடிக்கையில் பரஸ்பர சட்ட உதவி தொடாபான உடன்படிக்கைகளை செய்தது. 2015 மே 28ம் திகதி கௌரவ நீதி அமைச்சரால் ரஷ்யாவுடன் பரஸ்பர சட்ட உதவி தொடர்பான உடன்படிக்கை செய்யப்பட்டது.

- **ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி.) சட்ட அமுலாக்கம், நீதியை அணுகுதல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு என்பனவற்றைப் பலப்படுத்தும் கருத்திட்டம்**

2014 பெப்ரவரியில் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்த இக்கருத்திட்டத்தின் மூலம் பல அலுவல்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் மேலும் பல நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- சட்டத்தின் தாமதத்தை குறைத்துக் கொள்வதை பிரதானமாக எதிர்பார்க்கும் இக் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பிரதிபலனாக வழக்கு அறிக்கைகளை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செற்வதற்காக மேன்முறையீட்டு

நீதிமன்றத்தில் விசேட **மொழிபெயர்ப்புக் கூறொன்று** தாபிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 98 வழக்கு அறிக்கைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

- மட்டக்களப்பு, இரத்தினபுரி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் **மாவட்ட குற்றவியல் சட்ட வழக்கு முகாமைத்துவ குழுக்களைத் தாபித்து நடாத்துதல்.** முதலாவது மாதிரி வழக்கு முகாமைத்துவக் குழு கூட்டம் 2015 யூன் 25ம் திகதி மட்டக்களப்பில் நடாத்தப்பட்டதுடன் இரண்டாவது கூட்டம் 2015 யூலை 16ம் திகதி இரத்தினபுரியில் நடாத்தப்பட்டது.

- **தேசிய மட்டத்தில் வழக்கு முகாமைத்துவக் குழுவைத் தாபித்தல்**. இரண்டாவது தேசிய வழக்கு முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2015 யூலை 14ம் திகதி நீதி அமைச்சர் கௌரவ விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

- **தண்டணைத் தொடரினுள் வழக்குகளின் முகாமைத்துவத்திற்கு உள்ள சவால்கள் பற்றிய நிறுவனத் தேவைகளை மதிப்பிடுதல்**.
  தண்டணைத் தொடருடன் தொடர்புடைய நிறுவனங்களினுள் விதிமுறைப்பட்ட நிறுவனத் தேவைகள் மதிப்பீடொன்றைச் செய்வதற்கு வெரீட்டே ஆய்வொன்றிற்காக உடன்பட்டுள்ளது. பங்குதாரர்களின் நேர்முகக் கலந்துரையாடல்கள் பல 2015ஆம் ஆண்டில் முடித்துக்கொள்ளப்பட்டுள்ளன

- சட்ட மருத்துவ அலுவலர்களுக்கு வழக்கு முகாமைத்துவம் சம்பந்தமான மாநாடொன்று நடாத்தப்பட்டது.

- **தேங்கிக் கிடக்கும் வழக்குகளை அடையாளங் கண்டு முன்னுரிமை வழக்குகளை முடிப்பதற்கு** நீதித்துறை **மற்றும் வழக்காடும் தரப்பினருக்கு உதவுதல்**.
- தேங்கிக் கிடக்கும் வழக்குகளை முடிப்பதற்கு 8 அரச சட்டவாதிகள் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உதவும் பொருட்டு நீதி அமைச்சு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்தது. பார்வையிடப்பட்ட மொத்த கோவைகள்: போதை வஸ்து- 902, சிறுவர் துஸ்பிரயோக பிரிவு- 865 மற்றும் பொதுமக்கள் வழக்குப்பிரிவு- 80

- **சட்ட உதவி சம்பந்தமான தேசிய கொள்கையொன்றை விருத்தி செய்தல்.**
  சட்ட உதவி சம்பந்தமான தேசிய கொள்கையை விருத்தி செய்யும் ஆலோசகர் நீதி அமைச்சுடனும் சட்ட உதவி ஆணைக்குழுவுடனும் இணைந்து சட்ட உதவி சம்பந்தமான தேசிய கொள்கையின் ஆரம்ப வரைவை சமர்ப்பித்துள்ளார்.

- **குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக் காரர்களைப் பாதுகாக்கும் சட்டத்திற்கு ஆதரவு வழங்கல்**.
  கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 75 இற்கும் அதிகமான பொலிஸ் அலுவலர்களுக்கு ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு அமைச்சு அனுசரனை வழங்கியது.

- குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை மற்றும் தண்டனைச் சட்டக்கோவை என்பன (தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு) சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளில் ஒருங்கிணைக்கப்பட்டு பிரசுரிப்பதற்காக அரசாங்க அச்சகருக்கு அனுப்பப்பட்டது. சான்றுகள் கட்டளைச் சட்டம் மற்றும் நீதித்துறைச் சட்டம் என்பன 2015 செப்டம்பர் இல் ஒருங்கிணைப்பதற்காகப் பொறுப்பேற்கப்படுகின்றது.

- சட்ட வரைவு தொடர்பான விரிவான ஆங்கில மொழி மூல பயிற்சி நெறி ஒன்று 2014 டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்தின் எல்லா அலுவலர்களுக்கும் கொழும்பு பிரிட்டிஸ் கவுன்சிலில் இப்பயிற்சிநெறி நடாத்திமுடிக்கப்பட்டுள்ளது.

- குற்றவியல் நீதி சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு உதவியளிக்கப்பட்டது.

- **ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்ட சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் நீதிமன்றங்கள் தொடர்பான கருத்திட்டம்**

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்தி முடிவுறுத்துவதும் துஸ்பிரயோகத்திற்குப் பலியான சிறுவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதுமாகும். இந்த திட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களாவன சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சு என்பன வாகும். இந்த புதிய முயற்சி சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்தி பொலிஸில் புகார் செய்த தேதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் முடித்துக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத் திட்டம் சிறுவர்கள் குற்றவியல் நீதி முறைமையில் பங்கேற்கும்போது அவர்கள் மீண்டும் பாதிக்கப்படாமல் தடுப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் நீதிமன்றங்கள் தொடர்பான கருத்திட்டம் பெப்ரவரி மாதத்தில் மூன்று நாள் பொலிஸ் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தியது

நீதித்துறை முறைமையினுள் பிள்ளைப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதற்காக கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஆலோனைச் சபை ஒன்றும் வழிப்படுத்தும் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. 2015 யூனில் ஆலோசனைச் சபையூடாக வத்தளை மற்றும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றங்கள் பிள்ளைத் துஸ்பிரயோக வழக்குகள் மட்டும் விசாரிப்பதற்காக வேறாக இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன

சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் நீதிமன்ற கருத்திட்டம் தடயவியல் மருத்துவ நோயியல் வல்லுநர்கள் குழுவிற்கு பிள்ளை பாதுகாப்பு சம்பந்தமான தமது வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்காக தொழில்நுட்ப உதவியை வழங்கியுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் நீதிமன்றக் கருத்திட்டம் தற்போது நீதிமன்றங்களை புனரமைக்கும் நடவடிக்கையில் கவனம் செலுத்துகிறது. அம்பாறை,மொனராகலை, வவுனியா மட்டக்களப்பு, அனுராதபுரம், யாழ்ப்பாணம் என்பன பிரதானமாகக் கவனம் செலுத்தப்படும் பிரதேசங்களாகும்.

- **சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உப குழு**

அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற உத்தேச சட்டங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகளை ஆராய்ந்து அவை தொடர்பாக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக கௌரவ நீதி அமைச்சரின் தலைமையில் 2015 இல் சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உப குழு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டது.

அமைச்சரவை உப குழுவின் கீழ் அலுவலர்களின் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அவ்வலுவலர்கள் குழுவினால் சட்டங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகள் ஆராயப்பட்டு அவை தொடர்பான அவர்களது தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் அமைச்சரவைத் துணைக் குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றன.

நீதி அமைச்சின் செயலாளர் சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உப குழுவின் கூட்டுநர் என்பதுடன் சட்டவாக்கம் சம்பந்தமாக அலுவலர்கள் மட்டத்திலான பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகள் செய்யப்படுவது நீதி அமைச்சில் ஆகும். அநேகமாக இப் பரிந்துரைகள் சட்டவாக்க வரைவொன்றின் வடிவத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பின்னர் அமைச்சரவை உப குழுவினால் அலுவலர்கள் குழுவின் பரிந்துரைகள் வாசித்துப்பார்த்து குழுவின் பரிந்துரைகள் குறித்துக்கொள்ளப்படுகின்றன. நீதி அமைச்சினால் இப் பரிந்துரைகள் கோவைப்படுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பப்படுகின்றன. அமைச்சரவை உப குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா சட்டமூலங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பரிந்துரைகள் தாமதமின்றி அனுப்பப்படுகின்றன.

- **ஆட்கள் வியாபாரத்திற்கு எதிரான தேசிய செயலணி**

2010 ஆம் ஆண்டில் ஆட்கள் வியாபாரத்திற்கு எதிரான செயலணியொன்று நீதி அமைச்சினால் நிறுவப்பட்டதுடன் இலங்கைக்குள் ஆட்கள் வியாபாரத்திற்கு எதிராக செயற்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் அச் செயல்களை மேற்பார்வை செய்யும்பொருட்டு இச் செயலணி தேசிய இணைப்பு நிறுவனமாக செயற்படுகிறது. நாட்டில் நடைபெறுகின்ற ஆட்கள் வியாபாரங்கள் சம்பந்தமாக கவனஞ் செலுத்தும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களாக இனங்காணப்பட்ட எல்லா அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்பினை வலுப்படுத்துதல் இந்த செயலணியின் நோக்கமாகும்.

ஆட்கள் வியாபாரத்தில் பாதிக்கப்படுபவர்களை அடையாளம் காணுதல், பரிந்துரைத்தல், பாதுகாத்தல் என்பவற்றை அதிகரிக்கும் நோக்குடன் இச் செயலணியால் நியம இயக்க செயன்முறை ஒன்று விருத்திசெய்யப்பட்டது. இது அமைச்சரவை அலுவலகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 2015 மார்ச்சில் தொடங்கப்பட்டது.

ஆட்கள் வியாபாரத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக தங்குமிடமொன்றை நிறுவுதல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அவசர தேவை என இச் செயலணி அடையாளங் கண்டுள்ளதுடன் அதன்படி இத்தங்குமிடம் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் 2012 இல் ஸ்தாபிக்கப்பட்டது.

இச் செயலணியின் நேரடி மேற்பார்வையின் கீழ் மகளிர் விவகார அமைச்சு தங்குமிடத்திற்கான வழிமுறைகளை விருத்தி செய்தது. தங்குமிட பணியாளர்களுக்கு 2015 யூனில் பயிற்சியும் வழங்கியது.

இச் செயலணியின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று வருடாந்த செயற்திட்டத்தினை உருவாக்குவதாகும். இச் செயலணி மூலம் 2011,2012,2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை உறுப்பினர்களால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆட்கள் வியாபாரம் பற்றி பொதுமக்கள் மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் சம்பந்தமாகவும் உறுப்பினர் நிறுவனங்களை இச் செயலணி மேற்பார்வை செய்யும்.

இச் செயலணி இலங்கைப் பொலிஸ் திணைக்களத்திற்கு ஆளுமையை விருத்தி செய்யும் பயிற்சித் திட்டங்களை நடாத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளது.

## 5.2 நிருவாக மற்றும் தாபன பிரிவு

நிருவாக மற்றும் தாபன பிரிவின் முதன்மையான குறிக்கோள் நீதி அமைச்சினதும் அதன் கீழ்வரும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினதும் பயிற்சி மற்றும் திறமையான மனிதவளங்ளை வழங்குவதற்கு உதவி புரிவதாகும். பணியாட்தொகுதியினரை அங்கீகரித்தல், ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்தல், அலுவலர்களைத் தெரிவுசெய்து ஆட்சேர்ப்புச்செய்தல், பயிற்சியளித்தல், இடமாற்றம் செய்தல், பதவியுயர்வு வழங்கல், மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை என்பன இதில் உள்ளடங்குகின்றன. இதன்பிரகாரம் நீதி அமைச்சின் நிருவாக மற்றும் தாபன பிரிவு நீதி அமைச்சுக்கு நேரடியாக இணைக்கப்பட்டுள்ள 215 அலுவலர்களினதும் நாடுபூராவுமுள்ள நீதிமன்றங்களில் பணிபுரியும் 3,697 அலுவலர்களினதும் நிருவாகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ளது.

அத்துடன் கடன் மற்றும் முற்பண அங்கீகாரம், அரச ஊழியர்களின் பிணைப்பொறுப்பு, நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை, என்பனவும் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

மேலும் திடீர் மரணவிசாரணை அதிகாரிகள், சமாதான நீதிவான்கள், சமாதான நீதிவான்கள் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்கள், சத்தியப்பிரமாண ஆணையாளர்கள், சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோரை நியமிக்கும் பணிகள் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

2015 சனவரியில் அமைச்சரவையில் ஏற்பட்ட மாற்றத்தினைத் தொடர்ந்து சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம் மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் என்பன நீதி அமைச்சின் கீழ் வந்தமை நிருவாகக் கிளையின் வேலையை அதிகரிக்கச் செய்துள்ளது. 2015ம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய நிருவாகக் கிளையினால் மேற்கொள்ளப்பட்ட கடமைகள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு.

2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையான காலப்பகுதியில் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகளின் விபரம் கீழேதரப்பட்டுள்ளது.

- **பதவிகளை உருவாக்கல்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் நிதி பிரமாண ஒழுங்குவிதி 71 இற்கு அமைய புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன.

| திணைக்களங்கள்/ நிறுவனங்கள் | பதவி நிலை அலுவலர்கள் | இணைந்த சேவை | சிற்றூழியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நீதி அமைச்சு | - | - | 88 | 88 |
| கடன் இணக்க சபை திணைக்களம் | - | - | 02 | 02 |
| இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | - | 01 | 03 | 04 |
| உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | - | 04 | - | 04 |

- **ஆட்சேர்ப்புத் திட்டங்களை தயாரித்தலும் அனுமதிக்காக சமர்ப்பித்தலும்**

சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் மூன்று (03) ஆட்சேர்ப்பு திட்டங்கள் அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 01 ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- **ஆட்சேர்ப்பும் நியமனங்களும்**

**ஆட்சேர்ப்பு**

| நிறுவனம் | பதவி | ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நீதி அமைச்சு | மேலதிக செயலாளர் - சட்டம் (பதவியுயர்வு) | 02 |
| | சாரதி | 02 |
| நீதி அமைச்சு (நீதிமன்றங்களுக்கு) | அலுவலக உதவியாளர் | 119 |
| தொழில் நியாயசபைகள் அலுவலகம் | நீதிமன்ற பாதுகாவலர் | 24 |
| | சுருக்கெழுத்தாளர்கள் | 24 |
| | அலுவலக உதவியாளர் | 01 |
| மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | சாரதி | 01 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | அலுவலக உதவியாளர் | 07 |
| அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | அலுவலக உதவியாளர் | 02 |

- **நியமனங்கள்**

கௌரவ நீதி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அவரினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் நியமனங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவி | நியமனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சத்தியப்பிரமாண ஆணையாளர் | 956 |
| திடீர் மரணவிசாரணை அதிகாரி (தற்காலிகம்) | 11 |
| சமாதான நீதிவான்கள் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்கள் | 33 |
| சமாதான நீதிவான்கள், | 2,436 |
| சமாதான நீதிவான்களுக்கு அடையாள அட்டை வினியொகித்தல் | 2, 929 (அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் ரூபா. 585,800) |
| சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள் | 06 |

- **ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தல்**

சமாதான நீதிவான்களால் கையொப்பமிடப்பட்ட சத்தியக்கடதாசி, சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களால் சில ஆவணங்களை அவை முறையாக நியமிக்கப்பட்ட சமாதான நீதிவான்கள் மற்றும் சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களால் தான் மேற்கொள்ளப்பட்டதென்பதை நீதி அமைச்சு அத்தாட்சிப்படுத்த வேண்டும். குறிப்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சினூடாக வெளிநாட்டு உயர்ஸ்தானிகராலயம் மற்றும் தூதரகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களும் அதுபோன்ற ஏனைய சட்டம் தொடர்பான ஆவணங்களும் அமைச்சினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். தினந்தோறும் ஏறக்குறைய 50 - 60 ஆவணங்கள் அமைச்சுக்குக் கிடைக்கின்றன. அவற்றினை அத்தாட்சிப்படுத்தும் பணி நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- **பயிற்சி**

**உள்ளூர்**

**நீதி அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் தரத்திலிருந்து சிற்றூழியர் தரம் வரை எல்லா அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. அவைபற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.**

| பயிற்சியின் தன்மை | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| விடய ஆய்வு | 267 |
| தலைமைத்துவம் | 20 |
| ஊக்கமளித்தல் பயிற்சி | 60 |

**வெளிநாடு**

| பயிற்சியின் தன்மை | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பயிற்சி (நீதிபதிகள் உட்பட) | 305 |
| மாநாடுகள் / பயிற்சிப்பட்டறைகள் | 33 |

- **கடன் அங்கீகாரம்**

| கடன் வகை | தரப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| ஆதனம்/ வீடமைப்புக் கடன் | 74 | 95,151,952.00 |
| வாகன கடன் | - | - |
| இடர் கடன் | 126 | 8,832,875.00 |
| பண்டிகை முற்பணம் | 224 | 2,240,000.00 |
| விசேட முற்பணம் | 75 | 300,000.00 |
| துவிச்சக்கரவண்டி கடன் | 11 | 66,000 |

2015 ஆகஸ்ட் 17ம் திகதியிலிருந்து ஆதன / வீட்டுக் கடன்கள் வாகனக் கடன்கள் என்பவற்றிற்கான அங்கீகாரம் திணைக்களத் தலைவர்களாலும் உயர் நீதிமன்ற நீதிபதிகளாலும் அங்கீகரிக்கப்படுகின்றன.

- **ஏலவிற்பனை**

| ஏலவிற்பனைகளின் எண்ணிக்கை | செயல்முறை தொகை (ரூபா) |
|---|---|
| 30 (பொருட்கள்) | 18,072,427.00 |
| 15 (மண்) | 4,558,095.00.00 |

- **அலுவலக வாகனங்களுக்கான காப்புறுதி**

| திணைக்களம் | அலுவலக வாகனங்களின் எண்ணிக்கை | காப்புறுதி வகை | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| அமைச்சரின் அலுவலர்கள் | 08 | (பூரண காப்புறுதி) | 1,514,781.21 |
| நீதித்துறை அலுவலர்களின் அலுவலக வாகனம் | 161 | (பூரண காப்புறுதி) | 10,686,180.54 |
| | 01 | (மூன்றாம் நபர் காப்புறுதி) | 1,147.94 |
| அமைச்சின் அலுவலக வாகனம் | 25 | (பூரண காப்புறுதி) | 1,334,681.59 |
| | 08 | (மூன்றாம் நபர் காப்புறுதி) | 10,905.45 |

- **நீதி அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்களின் ஏல விற்பனை**

2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை கையுதிர்வு செய்யப்பட்டு பழுது பார்க்க முடியாத நிலையிலுள்ள வாகனங்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானம் பற்றிய விபரம் வருமாறு

| | |
|---|---|
| வாகன விற்பனை மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் | ரூபா 28,598,180.00 |
| கேள்விப்பத்திரங்கள் இரத்து செய்யப்பட்டதால் பெறப்பட்ட வருமானம் | ரூபா 80,000.00 |
| கேள்விப்பத்திரங்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானம் | ரூபா 194,000.00 |
| **மொத்த வருமானம்** | **ரூபா 28,872,180.00** |

**நீதிமன்றங்களில் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு உற்பத்தித்திறன் கோட்பாட்டை அறிமுகம் செய்தல்**

உற்பத்தித்திறன் கோட்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 102 நீதிமன்றங்களிலும் 36 தொழில்நியாய சபைகளிலும் நடாத்தப்பட்டுள்ளன. இந் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளில் 94 நீதிமன்றங்களும் 36 தொழில் நியாய சபைகளும் உற்பத்தித்திறன் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளன. இப் போட்டிகளின் வெற்றியாளர்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 5.3 கணக்குகள் பிரிவு

அமைச்சின் கணக்கீட்டு முறையை வினைத்திறனுள்ளதாகவும் பயனுறுதியுள்ளதாகவும் மேம்படுத்துவதற்காக 2015ம் ஆண்டில் கீழே குறிப்பிட்டவாறு அமைச்சு நிருவாகம் மற்றும் நீதிமன்ற நிருவாகம் ஆகிய செலவின தலைப்புகளின் கீழ் வரும் கணக்குகளை சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்காக நீதி அமைச்சிற்கு பின்வருமாறு நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. கௌரவ அமைச்சரின் அலுவலகம்
2. நீதி அமைச்சு நிருவாகம்
3. நீதி மன்றங்களின் நிருவாகம்
4. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
5. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

**நிதிரீதியான முன்னேற்றம் (2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை)**

**அமைச்சு நிருவாகம் 110-1, 2 & 3**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 764,220,000 | 685,851,696 |
| மூலதன செலவினம் | 110,537,000 | 88,538,798 |
| **மொத்தம்** | **874,757,000** | **774,390,494** |

**நீதிமன்ற நிருவாகம் 228-  1 & 2**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 5,061,927,000 | 4,992,468 |
| மூலதன செலவினம் | 1,205,092,000 | 824,065,687 |
| **மொத்தம்** | **6,267,019,000** | **5,817,048,155** |

## 5.4 உட்கட்டமைப்புப் பிரிவு

நீதி அமைச்சின் உட்கட்டமைப்புப் பிரிவானது நீதிமன்றக் கட்டிடங்களை நிர்மாணித்தல், பேணல், மற்றும் காணி கொள்ளல் போன்ற நீதிமன்ற முறைமைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் அமைச்சில் முக்கிய பணியொன்றை ஆற்றுகின்றது.

**பின்வரும் கருத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன**

1. ஹிங்குராங்கொட மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தின் ஆவணக்காப்பறையையும் சாட்சிப்பொருளறையையும் நிருமாணித்தல்
2. மஹியங்கனை மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தின் ஆவணக்காப்பறையையும் சாட்சிப்பொருளறையையும் நிருமாணித்தல்
3. மத்துகம மாவட்ட நீதிமன்றத்தின் வாகனத் தரிப்பிடத்தையும் பொதுமக்களுக்கான மலசல கூடத்தையும் நிருமாணித்தல்
4. நாஉல நீதிவான் நீதிமன்ற அலுவலகக் கட்டிடத்தை நிருமாணித்தல்
5. மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டிடத்தொகுதி கட்டம் ii



6. சர்வதேச நடுத்தீர்ப்பு மையம்




7. கெக்கிராவ மாவட்ட நீதிமன்றத்தில் மரத்தினாலான மேடையை நிருமாணித்தல்
8. ஹொரண நீதிமன்றக் கட்டிடத்தொகுதியில் காவலாளி கூண்டை நிருமாணித்தல்

9. பண்டாரவளை மாவட்ட நீதிமன்றத்தில் புதிய எல்லைமதிலை நிருமாணித்தல்
10. சாய்ந்தமருதுவில் காதி நீதிமன்றத்தை நிருமாணித்தல்

**பின்வரும் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன**

1. காலி நீதிமன்ற கட்டிடத் தொகுதி






2. ஹோமாகம நீதிமன்ற கட்டிடத் தொகுதி






3. வத்தளை நீதிமன்ற கட்டிடத்தொகுதி





4. கலகெதர நீதிமன்ற கட்டிடம்




5. மாத்தறை நீதிமன்றக் கட்டிடம்
6. எம்பிலிபிட்டிய புதிய நீதிவான் நீதிமன்ற கட்டிடமும், எல்லை மதில் மற்றும் நீதிவான் விடுதி ஆகியவற்றை நிருமாணித்தல்
7. மூதூர் மாவட்ட / நீதிவான் நீதிமன்றக் கட்டிடத்தை நிருமாணித்தல்
8. வெல்லவாயா நீதிமன்றத்தில் ஆவணக் காப்பறையை நிருமாணித்தல்
9. புத்தளத்தில் உயர் நீதிமன்ற நீதிபதியின் வங்களாவை நிருமாணித்தல்
10. பொலன்னறுவையில் உயர்நீதிமன்ற நீதிபதியின் வங்களாவை நிருமாணித்தல்
11. பிபிலவில் நீதிவான் வங்களாவை நிருமாணித்தல்
12. எல்பிட்டியவில் அலுவலகக் கட்டிடத்தை நிருமாணித்தல்
13. அவிசாவளை உயர் நீதிமன்றத்தில் எல்லை மதிலை நிருமாணித்தல்
14. கம்பொல மாவட்ட நீதிபதியின் வங்களாவில் காவலாளி கூட்டினை அமைத்தல்
15. ஹெல்பொட சுற்று நீதிவான் நீதிமன்றத்தில் மலசலகூடத்தை நிருமாணித்தல்
16. கம்பொல மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் மலசலகூடத்தை நிருமாணித்தல்
17. கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் பௌத்த நீதிமன்றத்தையும் ஆவணக் காப்பறையையும் நிருமாணித்தல்
18. பதுளை நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் அலுவலகம் மற்றும் போசனசாலையை நிருமாணித்தல்
19. திஸ்ஸமஹாராமவில் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் ஆவணக் காப்பறையை நிருமாணித்தல்
20. களுவாஞ்சிக்குடி நீதிமன்றத்தில் ஆவணக்காப்பறை மற்றும் சான்றுப்பொருளறையை நிருமாணித்தல்
21. கேகாலை குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முதலாம் மாடியை நிருமாணித்தல்
22. காலி மாவட்ட நீதிமன்றத்தில் எல்லை மதிலையும் சாப்பாட்டு அறையையும் நிருமாணித்தல்
23. பருத்தித்துறை மாவட்ட / நீதிவான் நீதிமன்றத்தில் ஆவணக் காப்பறையை நிருமாணித்தல்
24. ஆணைமடுவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல்
25. நிக்கவரெட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல்
26. கெற்றிபொல நீதிவான் நீதிமன்றத்தில் ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல்
27. கல்கமுவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல்
28. கஸ்பாவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல்

**பின்வரும் கட்டிடங்கள் 2015 இல் புனருத்தாரணம் செய்யப்படுகின்றன.**

1. கொழும்பு நீதிவான் நீதிமன்ற திருத்தவேலை
2. கொழும்பு பிரதான நீதிவான் வங்களா திருத்தவேலை மற்றும் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத் திருத்தவேலை
3. கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தின் கீழ் தளம் சான்றுப்பொருள் அறையாக மாற்றியமைத்தல்
4. கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற திருத்த வேலை
5. கம்பஹா மாவட்ட நீதிமன்ற அலுவலர்களின் மதியபோசன அறை திருத்த வேலை
6. கந்தளாய் நீதிவான் நீதிமன்ற வங்களா திருத்தவேலை
7. கேகாலை மாவட்ட நீதிபதியின் வங்களா திருத்தவேலை
8. மாத்தறை மாவட்ட நீதிபதியின் வங்களா திருத்தவேலை
9. கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தின் மலசலகூட திருத்தவேலை
10. நுகேகொட நீதிவான் வங்களாவின் காவலாளி அறை திருத்தவேலை
11. சியாம்பலாந்துவ சுற்று நீதிவான் நீதிமன்ற ஆவணகாப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறை திருத்தவேலை
12. வரக்காப்பொல மாவட்ட நீதிபதி வங்களாவை பூரணமாக திருத்தி அமைத்தல்
13. தெஹியத்தகண்டிய நீதிவான் நீதிமன்றத்தை பூரணமாக திருத்தி அமைத்தல்
14. வாரியபொல மாவட்ட நீதிபதியின் வங்களாவின் திருத்தவேலை
15. அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தின் திருத்தவேலை
16. கேகாலை மேலதிக மாவட்ட நீதிபதி வங்களாவை பூரணமாக திருத்தி அமைத்தல்
17. மினுவாங்கொட மாவட்ட / நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர் அறை பிரிவிடுதல் வேலை, காவலாளி கூண்டை நிர்மாணித்தல் மற்றும் மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தை நிர்மாணித்தல்
18. கொழும்பு 7 ஸ்ரேன்மோ கிரேசனில் மேல் நீதிமன்ற வங்களாவை திருத்தி அமைத்தல்

**2015 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறான நிதிரீதியான முன்னேற்றம்** (228-1-1)

| | விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| **2502** | **கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் நிர்மாணம்** | **700,000,000** | **369,766,779** |
| 1 | *காலி நீதிமன்ற கட்டிடத் தொகுதி* | *105,000,000* | *34,168,278* |
| 2 | *ஹோமாகம நீதிமன்ற கட்டிடத் தொகுதி* | *183,510,000* | *86,427,650* |
| 3 | *வத்தளை நீதிமன்றக் கட்டிடத்தொகுதி* | *50,000,000* | *11,355,268* |
| 4 | *மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டிடத்தொகுதி கட்டம் ii* | *56,490,000* | *45,578,898* |
| 5 | *சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையம்* | *5,000,000* | *0* |
| 6 | *கலகெதர நீதிமன்ற கட்டிடம்* | *50,000,000* | *5,585,904* |
| 7 | *மாத்தறை நீதிமன்ற கட்டிடம்* | *50,000,000* | *0* |
| 8 | *சிறிய அளவிலான கருத்திட்டங்கள்* | *200,000,000* | *186,650,781* |
| **2001** | **கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் புனரமைப்பு** | **200,000,000** | **187,240,390** |
| | **மொத்தம்** | **900,000,000** | **557,007,169** |

## 5.5 அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவினால் நீதி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளை நிறைவேற்றல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டு தை முதல் புரட்டாதி வரையான காலத்தினுள் சிறைச்சாலைகள் திணைக்களம் உட்பட ஏனைய நிறுவனங்களினதும் அபிவிருத்திச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சிறைச்சாலைகள் திணைக்களம், சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம என்பன சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதால் தற்போது அபிவிருத்திப் பிரிவினால் கீழ்க்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

- உட்கட்டமைப்புப் பிரிவு மற்றும் திட்டமிடற் பிரிவுகளை ஒன்றிணைத்து நீதி அமைச்சிற்குரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும், செயற்றிட்டங்களையும் இனங்காணல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பின்னூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- காணிகளைப் பெற்றுக்கொள்ளல் சட்டம், அரசாங்கக் காணிகள் கட்டளைச் சட்டம் மற்றும் உடைமையை மீளக்கொள்ளல் சட்டங்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நீதி அமைச்சுக்குரிய காணிகளிலுள்ள சிக்கல்களைத் தவிர்த்து, அமைச்சின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ளல்.
- நீதி அமைச்சிற்குட்பட்ட நிறுவனங்களுக்கான கட்டிடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான அலுவலக வாசஸ்தலங்களைக் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- திட்டமிடற் பிரிவுடன் இணைந்து தரவுகளைத் திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஆராய்ச்சிகளைச் செய்தல்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்து அரசினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

## 5.6 திட்டமிடற் பிரிவு

திட்டமிடல் பிரிவு அமைச்சிலும் அதன் கீழ் வரும் திணைக்களங்களிலும் உள்ள கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பான பணிகளுடன் பின்வரும் பணிகளையும் ஆற்றுகிறது: -

- அமைச்சுக்காக வருடாந்த மூலதன வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டை தயார் செய்தல்
- வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்தை தயார் செய்தல்.
- காலாண்டு முன்னேற்ற அறிக்கையைத் தயார் செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.
- நீதிமன்றக் கட்டிடங்களை நிர்மாணித்தல் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயார் செய்தல்.
- முன்னேற்ற அறிக்கையை தயார் செய்தல் (எதிர்வரும் ஆண்டின் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).
- வழக்குகள் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரங்களைத் திரட்டுதல்
- வழக்குகள் பற்றிய வருடாந்த அறிக்கையை தயார் செய்தல்.
- கருத்திட்ட அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் வருடாந்த கணக்கு அறிக்கைகளை பாரளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- நீதி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மாவட்ட ரீதியான மற்றும் பிரதேச ரீதியான அபிவிருத்தி கருமங்களை மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் கூட்டிணைத்தல்.
- பாராளுமன்ற ஆலோசனைக்குழு கூட்டத்தினை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பாராளுமன்ற வினா சம்பந்தமான ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கெள்ளல்

## 5.7 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், மற்றும் 03 நியதிச்சட்ட நிறுவனங்களான மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிருவாக சபை, நீதிபதிகள் நிறுவனம், சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் அமைச்சு நிருவாகச் செலவினத் தலைப்பின் கீழ் உதவிக்கருத்திட்டமாக இயங்கும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, நீதிமன்ற செலவினத் தலைப்பின் கீழ் உதவிக்கருத்திட்டமாக இயங்கும் தொழில் நியாய சபை அலுவலகம் மற்றும் நீதிமன்ற செலவினத் தலைப்பின் கீழ் உள்ள மேல் நீதிமன்றங்கள், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் ஆகியனவற்றின் கணக்காய்வினை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவு மேற்கொள்கின்றது.

இப் பிரிவு தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரினது தலைமையில் 06 நிதி உதவியாளர்களினதும் 04 முகாமைத்துவ உதவியாளர்களினதும், 06 அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும், உதவியுடன் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இவ்வலுவலர்கள் மேற்கூறப்பட்ட நிறுவனங்களில் முறைமை கணக்காய்விற்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதுடன் 2015 சனவரி முதல் டிசம்பர் வரை 13 மேல் நீதிமன்றங்கள், 18 மாவட்ட/ நீதிவான் நீதிமன்றங்கள், 07 மாவட்ட நீதிமன்றங்கள், 20 நீதவான் நீதிமன்றங்கள், 19 தொழில் நியாய சபைகள், 07 மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் 15 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள், 02 விசேட கணக்காய்வு பரிசோதனைகள் உள்ளடங்கலாக 101 கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 06. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை

## 6.1 சட்டமா அதிபர் திணைக்களம்

**நோக்கு**

இலங்கைக்காகவும் அங்கு வாழ்கின்ற சகல மக்களுக்காகவும் நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றுவதற்காக பயனுள்ளவாறு பதிலளிக்கும் செயற்பாட்டின் முன்னோடி அரச நிறுவனமாக செயல்படுதல்

**பணி**

- இலங்கையின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்காக மதிப்புடனும் அபிமானத்துடனும் நேர்மையாகவும் செயலாற்றுதல் மற்றும் எம்மால் இயன்றளவில் இலங்கை மக்களுக்கு சேவை செய்தல்
- சமுதாய மற்றும் பொருளாதார சுபீட்சம், சம சந்தர்ப்பங்கள் மற்றும் மனிதநேயத்தை ஊக்குவிக்கும் முயற்சியின் போது இலங்கை மக்களுக்காக நீதி, பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்காக பாரபட்சமின்றியும் நீதியாகவும் இலங்கையின் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் முயற்சிக்கும்.

**நோக்கம்**

- இலங்கை அரசாங்கம், அரசாங்க நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காகத் தேவையான சகல சட்ட முறையான சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனைகளை உடனடியாக வழங்கல் மற்றும் அரசாங்கத்தின் விரிவான குறிக்கோள்களை விஸ்தரிப்புச் செய்யும் செயற்பாட்டின் போது விசேடித்த பணியொன்றை நிறைவேற்றுதல்.

சட்டமா அதிபர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பாக தோன்றும் தலைமைச் சட்ட ஆலோசகர் என்பதுடன் திணைக்களத்தின் தலைவராகவும் பொறுப்புக் கூறும் உத்தியோகத்தராகவும் கடமையாற்றுகின்றார். சட்டமா அதிபர் திணைக்களமானது “ஏ” வகுப்பு திணைக்களம் என்பதுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.21 ஆம் திகதிய 1993/13 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி பிரகடனத்தின் பிரகாரம் நீதி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களமானது, மத்திய அரசு, மாகாண சபைகள், அரச திணைக்களங்கள், நியதிச் சட்டச் சபைகள் மற்றும் அரச பங்களிப்பு நிறுவனங்களுக்கு சட்ட உதவியை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்கள், சிவில், குற்றவியல், அரசியலமைப்பு மற்றும் வர்த்தக விடயங்களில் அரச மற்றும் அரச சார்பான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் இலங்கையிலுள்ள உயர் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்கள் தொழில் நியாய சபைகள் என்பவற்றில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் சார்பாகத் தோன்றுவர்.

சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்காக திணைக்களத்தில் முறையே சிவில் பிரிவு குற்றவியல் பிரிவு மற்றும் அரச சட்டத்தரணிகள் பிரிவு ஆகிய மூன்று அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தாபனப் பிரிவும் கணக்குப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேற்கூறப்பட்ட அலகுகளுக்கு மேலதிகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் முறையாக நடைபெறுவதற்கு கூட்டுத்தாபனப் பிரிவு, மேலதிக அவசரகால சட்டத்தின் கீழ் கடமைகளை மேற்கொள்ள மேலதிக அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான பிரிவு, சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுப் பிரிவு, பொதுமக்கள் மனுப் பிரிவு மற்றும் உயர்நீதிமன்ற அலகு ஆகியன தாபிக்கப்பட்டுள்ளன.

**6.1.1 சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகள்**

- சிவில், குற்றவியல், அரசியலமைப்புச் சட்டம், வர்த்தகம் போன்ற விடயங்கள், சர்வதேச சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் என்பன தொடர்பாக அரசாங்கத்திற்கும் அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கல்
- உயர் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தல்
- புதிய சட்டங்களை சட்டவாக்கம் செய்யும் போதும் நடைமுறையிலுள்ள சட்டங்களைத் திருத்தும் போதும் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

சட்ட உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் பின்வரும் பிரிவுகள் உதவுகின்றன.

- குற்றவியல் பிரிவு
- சிவில் பிரிவு
- அரச சட்டத்தரணிகள் பிரிவு
- உயர் நீதிமன்றப் பிரிவு
- கூட்டுத்தாபனப் பிரிவு

மேலும் திணைக்களத்தின் தங்குதடையின்றிய செயற்பாடுகளுக்கு சிறப்பாக இனங்காணப்பட்ட பொறுப்புக்களையுடைய சிறப்புப் பிரிவுகள் உள்ளன.

- பொதுமக்கள் மனு அலகு (இப் பிரிவு மக்கள் மனுக்கள் தொடர்பில் வழக்குகளை கையாளும்)
- சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு (இப் பிரிவு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை கையாள்வதற்கு தாபிக்கப்பட்டுள்ளது)
- மே.அ.ஒ பிரிவு (இப்பிரிவு மேலதிக அவசரகால ஒழுங்கு விதிகள் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளைக் கையாளும்)
- குடிவரவு மற்றும் குடியகல்வுப் பிரிவு (இப்பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைக் கையாளும்)

மேற்கூறப்பட்ட பிரிவுகளும் அலகுகளும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முக்கிய செயற்பாடுகளை கையாளுகின்றன. அத்துடன் இத்திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்காக கணக்குப் பிரிவும் தாபனப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன.

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையான காலப்பகுதிக்கான ஒவ்வொரு பிரிவுகளினதும் முன்னேற்றம்**

| பிரிவுகள் | திறக்கப்பட்ட வழக்குக் கோப்புகள் | கோவையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் | விடுவிக்கப் பட்டவை | மூடப்பட்ட வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| சிவில் பிரிவு | 2,719 | - | 158 | - | 171 |
| குற்றவியல் பிரிவு | 4,791 | 2,019 | 975 | 471 | 3,473 |
| அரச சட்டத்தரணிகள் பிரிவு | 165 | - | - | - | 3,315 |
| உயர் நீதிமன்றப் பிரிவு | 508 | - | - | - | 532 |
| கூட்டுத்தாபனப் பிரிவு | 1,681 | - | - | - | 1,871 |
| பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு | 3,338 | 577 | 370 | 854 | 1,801 |
| பொதுமக்கள் மனுக்கள் பிரிவு | 591 | - | 35 | - | 217 |

- சிவில் பிரிவில் பதியப்பட்ட அதிகமான வழக்குகள் அரச சட்டத்தரணிகள் பிரிவினால் கையாளப்படுகின்றன என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

**2015.012.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| *விபரம்* | *ஒதுக்கம் (ரூபா)* | *செலவு (ரூபா)* |
|---|---|---|
| *மீண்டெழும் செலவினம்* | 657,616,000 | 655,066,755 |
| *மூலதன செலவினம்* | 610,500,000 | 91,192,070 |
| ***மொத்தம்*** | **1,268,116,000** | **746,258,825** |

## 6.2. சட்டவரைஞர் திணைக்களம்

**நோக்கு**

அரச கொள்கைகளை சட்ட முறைமையொன்றாக பரிவர்த்தனை செய்வதற்காக அரசாங்கத்திற்கு உதவுவதனூடாக நல்லாட்சியின் பாதுகாப்பைப் பேணுதல்

**பணி**

அரச கொள்கைகளை சட்ட முறைமையொன்றாக பரிவர்த்தனை செய்வதற்கு உதவும் பொருட்டு அரசியலமைப்புக்கு அமைவாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சட்டங்களை வரைதல்

சட்டவரைநர் திணைக்களத்தின் பிரதான பணியாவது அரசியலமைப்பு மற்றும் அமைச்சரவையின் தீர்மானங்களுக்கு அமைவாக பல்வேறு விடயங்கள் தொடர்பான அரச கொள்கைகளைச் சட்டங்களாக ஆக்குவதே ஆகும். புதிய சட்டங்களை விதித்தல் உளதாம் சட்டங்களை திருத்தஞ் செய்தல் மற்றும் பல அரச அமைச்சுகளிலிருந்து பெற்றுக் கொடுக்கப்படுகின்ற இடைச் சட்டங்களை மீள் நோக்குவதற்காக திணைக்களத்தினால் வரைவுகள் தயார் செய்யப்படுகின்றன. சட்ட மூலங்களின் மீளாய்வுக்காக கூட்டப்படுகின்ற பாராளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளல், பாராளுமன்றத்தில் தோற்றுதல் மற்றும் சட்ட மூலங்கள் தொடர்பான விவாதங்கள் நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்துடன் கூட்டிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல் என்பன இத்திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய செயற்பாடுகளில் உள்ளடங்குகின்றன. இத்திணைக்களம் அமைச்சுக்களின் கீழுள்ள அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபைகள் உட்பட சகல அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சேவைகளை வழங்குகின்றது. நானாவித வரைவுகள் மற்றும் இடைச் சட்டங்களைத் தயாரித்தல் தொடர்பாக அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சட்டமுறையான ஆலோசனைகளை பெற்றுக் கொடுப்பதும் இத்திணைக்களத்தால் செய்யப்படுகின்றது.

விசேடித்த அமைப்பு முறையிலான கடமை நிகழ்ச்சித் திட்டமொன்று இல்லாதிருப்பது இத் திணைக்களத்தின் விசேடித்த அம்சமாகிறது. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுவதனால் உத்தேச கொள்கைகளின் மீது, வழங்கப்பட்ட குறிப்பிட்டதொரு காலத்திற்குள் அரச அமைச்சுக்கள் மற்றும் அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களின் சட்டமுறையான தேவைப்பாடுகளின் மீது திணைக்களக் கடமை நிகழ்ச்சித் திட்டம் தயார் செய்யப்பட வேண்டியிருப்பது இந்நிலைக்கான காரணமாகிறது. இதன்படி திணைக்களத்தின் செயலாற்றறிக்கை தயார் செய்யப்படுவது குறித்துரைக்கப்பட்டதொரு ஆண்டு முழுவதிலும் சம்பந்தப்பட்ட சார்புடைய அமைச்சுக்களினால் சட்டங்கள் மற்றும் இடைச் சட்டத் திருத்தங்களுக்காக இத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள் வெற்றிகரமாக பூர்த்தி செய்வதன் மீதே ஆகும். பூர்வாங்க அல்லது இடைச் சட்டங்கள் ஆகிய எவையாகினும் அவற்றை அந் நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட சட்டக் காரணிகள் சம்பந்தமாக திணைக்களத்திற்கான சகல அம்சங்களும் மூண்று மொழிகளிலும் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

பின்வரும் சட்டங்கள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| 01 | ஒதுக்கீடு (திருத்த) சட்டம் | 01/2015 |
| 02 | கடற்றொழில், நீர்வாழ் உயிரினவளங்கள் (திருத்த) சட்டம் | 02/2015 |
| 03 | புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்த) சட்டம் | 03/2015 |
| 04 | குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் | 04/2015 |
| 05 | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 05/2015 |

| | | |
|---|---|---|
| 06 | மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்ற சட்டம் | 06/2015 |
| 07 | அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் | |
| 08 | குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் | 07/2015 |
| 09 | தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபை (நீக்கல்) சட்டம் | 08/2015 |
| 10 | உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | 09/2015 |
| 11 | நிதி சட்டம் | 10/2015 |
| 12 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (திருத்தச்) சட்டம் | 11/2015 |
| 13 | தேச நீர்மான வரீ (திருத்தச்) சட்டம் | 12/2015 |
| 14 | பொருளாதார சேவை அறவீடு (திருத்தச்) சட்டம் | 13/2015 |
| 15 | பந்தய, சூதாட்டவிதிப்பனவு (திருத்தச்) சட்டம் | 14/2015 |
| 16 | ஒதுக்கீடுத் (திருத்தச்) சட்டம் | 15/2015 |
| 17 | ஒதுக்கீடுச் சட்டம் | 16/2015 |

பின்வரும் சட்ட வரைவுகள் 2015.12.31இல் பூர்தியாக்கப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| 01 | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்தல் | LDO 25/2005 |
| 02 | காலவிதிப்பு கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்தல் | LDO 21/2010 |
| 03 | மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் | LDO 19/2014 |
| 04 | தொலைத்தொடர்பாடல் விதிப்பனவு | LDO 15/2015 |
| 05 | தெரவாத பிக்கு கதிகபவத | LDO 15/2014 |
| 06 | கடற்றொழில், நீரக வளமூலங்கள் திருத்தச் சட்டமூலம் | LDO 46/2015 |
| 07 | பௌத்த அறநிலையங்கள் சட்டமூலம் | LDO 20/2015 |
| 08 | உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புச் (திருத்தம்) சட்டமூலம் | LDO 35/2015 |
| 09 | நுண் நிதிச் சட்டமூலம் | LDO 32/2015 |
| 10 | ஊழியர்களின் வரவு, செலவு நிவாரணப்படிச் சட்டம் | LDO 27/2015 |
| 11 | ஊழியர்களின் தேசிய ஆகக்குறைந்த வேதனச் சட்டம் | LDO 51/2015 |
| 12 | ஆட்பதிவுச் சட்டமூலம் | LDO 33/2015 |
| 13 | தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) | LDO 28/2015 |
| 14 | குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) | LDO 40/2015 |
| 15 | கணக்காய்வுச் சட்டம் | LDO 03/2015 |
| 16 | தகவல்கள் சட்டம் | LDO 04/2015 |

2015.12.31ம் திகதி 23 சட்டங்கள், 62 மற்றும் 18 தனிநபர் சட்டமூலங்கள் தொடர்பான சட்டவாக்க வரைவுகள் மும்மொழிகளிலும் பூர்திசெய்யப்பட்டுள்ளன

**2015.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---:|---:|
| மீண்டெழும் செலவினம் | 87,840,000 | 76,206,838 |
| மூலதன செலவினம் | 70,810,000 | 11,920,605 |
| **மொத்தம்** | **158,650,000** | **88,127,443** |

## 6.3 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

1969ம் ஆண்டின் 03ம்இலக்க இலங்கை சட்டஆணைக்குழு சட்டத்தின்மூலம் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இது சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்ளும் பிரதான அரசாங்க நிறுவனமாகும். சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் பிரதான பணி தேவையான நிருவாக மற்றும் ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதாகும்.

**நோக்கு**

- நல்லாட்சிக்காக சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்தல்.

**செயற்பணிகள்**

- சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்துவதற்காக சட்ட ஆணைக்குழுச் சட்டத்தால் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பணிகளை அமுல்படுத்தல்.

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் சட்ட மறுசீரமைப்பை விருத்திசெய்வதாகும். அதற்காக சட்டஆணைக்குழு பின்வரும் பணிகளை ஆற்றுகிறது.

I. சட்டத்தை குறியீடுசெய்தல்
II. முரண்பாடுகளை ஒழித்தல்
III. சட்டத்தை முறையாக அபிவிருத்தி செய்து மறுசீரமைப்பதற்காக பொருள் அளவிலானதும் நடவடிக்கைமுறை சார்ந்ததுமான சட்டத்தை மீளாய்வு செய்தல்
IV. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றுதல்
V. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்
VI. சட்டத்தை மறுசீரமைப்பதற்காக எவ்வாறான பிரேரணைகளையும் பெற்று பரிசீலித்தல்
VII. மறுசீரமைப்பதற்காக காலத்திற்குகாலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து அமைச்சருக்கு வழங்குதல்
VIII. ஏனைய நாடுகளின் சட்டமுறை சம்பந்தமான தகவல்களை பெறல்
IX. துணைச் சட்டவாக்கங்கள் நன்கு ஏற்றுக்கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டத்திற்கும் இயைபானதென்பதை, பாதுகாக்கும் எண்ணத்துடன் பாராளுமன்றம் அல்லாத வேறு சபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிரந்தரமாக மீளாய்வு செய்தல்.
X. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையின் நடவடிக்கை முறை உட்பட சட்ட நடவடிக்கை முறைகளை பகுத்தறிவு செய்தல் மற்றும் இலகுபடுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகத் தயார் செய்தல்.
XI. சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகியமொழிகளில் சட்டத்தை குறியீடுசெய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்தல்

2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை முன்னேற்றம்

- சட்ட ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.
- சட்ட ஆணைக்குழு பிணைச்சட்டம், பிரிவிடல் சட்டம், பிள்ளைகளின் பராமரிப்பு, திருமண வயது, நன்கொடை உறுதிகளை அழித்துவிடுதல், பெரேட் நிறைவேற்றல், உயர்நீதிமன்ற விதிகளின் திருத்தம் ஆகிய சட்டமுறையான விடயங்களை ஆராய்வதற்கு முன்மொழிவு செய்தது.
- தேவையான சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பாக பொது மக்கள் தமது கருத்துக்களை அனுப்புவதற்கு சட்ட ஆணைக்குழுவினால் பத்திரிகைகளின் மூலம் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

சட்டஆணைக்குழுத் திணைக்களம் தற்போது பின்வரும் சட்ட மறுசீரமைப்பு அலுவல்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ளது.

- பரவேணி நிலகாரயாவுக்கு பிரிவிடல் வழக்கொன்றைக் கோவைப்படுத்துவதற்கு உள்ள உரிமை
  பிரிவிடல் சட்டத்தில் திருத்தஞ் செய்வதற்காக (பரவேணி நிலகாரயாவுக்கு பிரிவிடல் வழக்கொன்றைக் கோவைப்படுத்துவதற்கு உள்ள உரிமை) வரைவுப் பிரேரணையை நீதி அமைச்சருக்குச் சமர்ப்பிப்பதற்கு சட்ட ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.
- சமுதாய இணையத் தளங்கள் மற்றும் அந்தரங்கத்திற்கான உரிமை
  திருத்த வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது.
- உயர்நீதிமன்ற விதிகளின் திருத்தம்
- மேன்முறையீட்ட நிதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட திருத்தம் (மேன்முறையீடு நடவடிக்கை முறைச் சட்டம்)
  உத்தேச திருத்தங்களுடனான வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது.
- நியதிச்சட்ட கற்பழிப்பு சம்பந்தமாக தண்டிக்கும் நடவடிக்கைமுறை
- மோட்டார் வாகன சட்டத்தின் திருத்தம்
- மாற்ற முடியாத நன்கொடை உறுதிகளை அழித்துவிடுதல்.
- பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம்
- அந்தரங்கம் சம்பந்தப்பட்ட சட்டத்திற்காக முன்மொழியப்பட்ட அந்தரங்கம் மீறக்கூடிய சந்தர்ப்பங்கள்.

**2015.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 15,000,000 | 10,095,392 |
| மூலதன செலவினம் | 2,000,000 | 1,131,701 |
| **மொத்தம்** | **17,000,000** | **11,227,093** |

## 6.4 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

**நோக்கு**

நியாயமான சட்டத்தை மதிக்கின்ற சமுதாயத்தைக் கட்டியேழுப்புதல்

**செயற்பணிகள்**

நீதிமன்றங்கள், சட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சட்ட மருத்துவ, மற்றும் உணவு விஞ்ஞானம் பற்றிய பகுப்பாய்வு, அறிவுரை மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்.

இலங்கையிலுள்ள ஒரேயொரு சட்ட ஆய்வுகூடத்தை கொண்டுள்ள அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் உணவு விஞ்ஞானப்பிரிவு, சட்ட விஞ்ஞானப்பிரிவு ஆகிய இரு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. உணவு விஞ்ஞானப் பிரிவானது உணவு, மதுபானம், பால் மற்றும் நீர் ஆகிய நான்கு ஆய்வுகூடங்களை உள்ளடக்கியுள்ளது. சட்ட விஞ்ஞானப் பிரிவானது எறிபடைத்துறை பிரிவு, நீர்ப்பாயவியல், நஞ்சியல் பிரிவு, வெடிமருந்துகள் & தீ புலனாய்வுப் பிரிவு, போதை மருந்துகள் பிரிவு, சந்தேகத்திற்கிடமான ஆவண பிரிவு பல்லின பிரிவு ஆகிய ஏழு துறைகளைக் கொண்டுள்ளது.

இது சேவை வழங்கும் ஒரு திணைக்களமாவதுடன் நீதிமன்றங்கள், பொலிஸ் திணைக்களம், சுங்கத் திணைக்களம், வடிசாலை திணைக்களம்' துறைமுகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், சுகாதாரத் திணைக்களம், பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் மூலம் ஆற்றுப்படுத்தப்படுகின்ற சான்றுப்பொருட்களை விஞ்ஞான பரிசோதனைக்கு உட்படுத்தி அவைபற்றிய அறிக்கைகளை இத்திணைக்களம் வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்க அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற மாதிரிகள்

தரக்கட்டுப்பாட்டு அலுவல்களுக்காக பரிசோதனை செய்யப்படுவதுடன் இலங்கை சுங்கத்தால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற மாதிரிகள் தரக்கட்டுப்பாட்டு அலுவல்கள் மற்றும் சுங்கவரி வகைப்படுத்தலுக்காக பரிசோதனை செய்யப்படுகின்றன. மேலும் நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேக ஆவணங்களை பரிசோதனை செய்து அறிக்கையிடுதல் இத் திணைக்களத்தின் மூலம் செய்யப்படுகின்றது.


பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படும் எல்லா சான்றுப்பொருட்களும் உணவு மருந்துகள் சட்டம், தேசிய சுற்றாடல் சட்டம், மதுவரிக் கட்டளைச்சட்டம், புகையிலை மற்றும் மதுபான தேசிய அதிகாரசபை சட்டம், ஒப்பனைச் சாதனங்கள் உபாயங்கள், அவுடதங்கள் சட்டம், பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம், சுடுகலன் கட்டளைச்சட்டம், விசம், அபின், மற்றும் அபாயகர ஔடத சட்டம், வெடிபொருள் சட்டம், தீங்கு விளைவிக்கும் ஆயுத சட்டம், மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, சன்றுகள் கட்டளைச்சட்டம் போன்ற பல்வேறு கட்டளைச்சட்டங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட பரிசோதனைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவு பெறுகின்ற நிறுவனங்களில் விஞ்ஞான மதியுரைஞர்களாகவும் இத்திணைக்களம் செயலாற்றுகிறது. விசேஷமாக, இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு தரத்தை உருவாக்குவதில் இந்நிபுணர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். இந்நிபுணர்கள் பாதுகாப்பு அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க உதவிபுரிகின்றனர்.

இத் திணைக்களம் 2013 மே மாதம் முதல் பத்தரமுல்லை பெலவத்தையில் அமைந்துள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடமொன்றிற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. அத்தியாவசியமாகத் தேவைப்படும் டீ.என்.ஏ. ஆய்வுகூடமொன்று தேவையான எல்லா உபகரணங்களுடனும் இவ்வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற சான்றுப்பொருட்களின் பகுப்பாய்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திணைக்களம் குருநாகலில் மாகாண ஆய்வுகூடமொன்றை நிறுவியுள்ளது.

**2015.01.01 தொடக்கம் 20112.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| பகுதி | 2015.01.01 இல் உள்ள வழக்குகள் | பெறப்பட்ட வழக்குகள் | அறிக்கையிடப்பட்ட வழக்குகள் | 2015.08.31 இல் அறிக்கையிடப்படாது உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| போதை வஸ்துக்களும் பிற மருந்துகளும் | 326 | 7,269 | 6,978 | 617 |
| சுடுபடைக்கலன்களும் யுத்த தளபாடங்களும் | 454 | 361 | 436 | 379 |
| வெடிபொருளும் தீப்பிடித்தலும் | 254 | 315 | 407 | 162 |
| நச்சுப்பொருட்கள் | 1,302 | 2,060 | 2,299 | 1,065 |
| இரத்தம் மற்றும் பிற சரீர திரவங்கள் | 1,196 | 1,330 | 1,242 | 1,284 |
| ஆட்சேபனைக்குரிய பத்திரங்கள் | 383 | 769 | 886 | 266 |
| பல்வேறு சட்ட மருத்துவப் பொருட்கள் | 195 | 273 | 321 | 147 |
| தலைமை அலுவலக நீதிமன்ற மாதிரிகள் | 1 | 2,079 | 2,079 | 1 |
| பல்வேறு குடிவகை மற்றும் புகையிலை | 8 | 1,799 | 1,784 | 23 |
| குடிவகை- குருநாகல் | 27 | 2,726 | 2,753 | 0 |
| உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள் | 93 | 5,973 | 6,059 | 7 |
| பல்வேறு- உணவு வகைகள் | 52 | 1,487 | 1,535 | 4 |
| **மொத்தம்** | **4,291** | **26,443** | **26,779** | **3,955** |




**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையிலான நிதி ரீதியான முன்னேற்றம்**

| *விபரம்* | *ஒதுக்கம் (ரூபா)* | *செலவு (ரூபா)* |
|---|---|---|
| *மீண்டெழும் செலவினம்* | *224,800,000* | *210,080,000* |
| *மூலதன செலவினம்* | *290,500,000* | *162,600,000* |
| ***மொத்தம்*** | ***515,300,000*** | ***372,680,000*** |

## 6.5 பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

**நோக்கு**

நன்கொடையாளர்கள் மற்றும் அல்லது கருணை நம்பிக்கை நிதியங்கள் அல்லது ஆஸ்திகள் (பணம் மற்றும் அல்லது சொத்து) என்பனவற்றின் உரிமையாளர்கள் சட்ட வரம்புக்குள் அமைந்த தங்களது இருதி விருப்புகளை கடைபிடிக்க பயனாளிகளின் மிகச் சிறந்த பயனுக்காக அல்லது பொதுமக்களுக்காக நிதியம் பொது நம்பிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளல்.

**குறிக்கோள்**

பயனாளிகள் அடங்கலாக ஆஸ்திகளுக்கு கட்டுப்பட்ட எல்லா சம்பந்தப்பட்ட தரப்பினர்களை திருப்திபடுத்தும் ஒரு நோக்கத்திற்காக இந்த திணைக்களத்திற்கு பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட இறந்த நபரது நிதியங்கள் மற்றும் ஆஸ்திகளின் நிர்வாகததை திணைக்களத்தின் திறன்கள் மற்றும் வளங்கள் மூலமாக சிறந்த சேவையை வழங்குவதாகும்.

ஶ்ரீ லங்காவின் பொது நம்பிக்கையாளர் அலுவலகம் ஒரு பெருநிறுவனமாக அந்த பெயரின் கீழ் நித்திய அடுத்தடுத்து ஒரு அதிகாரப்பூர்வ முத்திரையுடன் நிறுவப்பட்டது. வேறு நிறுவனங்கள் போல 1988ம் ஆண்டின் 61ம் இலக்கம் மற்றும் 1983ம் ஆண்டின் 41 வது இலக்க சட்டம் மற்றும் 1975ம் ஆண்டு இலக்கம் 25 மற்றும் 1973ம் ஆண்டு இலக்கம் 44 மற்றும் 1938ம் ஆண்டு இலக்கம் 59 மற்றும் 1931ம் ஆணடு இலக்கம் 11ன் திருத்தப்பட்ட சட்டத்தின் 1922 ம் ஆண்டின் 1வது இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு பெருநிறுவனமாக அந்த பெயரின் கீழ் அதற்கு வழக்கு தொடரவோ அல்லது அதன் மேல் ஏனயவற்றிற்கு வழக்கு தொடரவோ முடியும்.

1988ம் ஆண்டின் 61வது சட்ட இலக்கம் 4ம் பிரிவின் கீழ் பொது நம்பிக்கையாளருக்கு உதவிபுரியும் வகையில் பிரதி பொது நம்பிக்கையாளர் அல்லது பிரதி உறுப்பினர்களை நியமிக்கலாம். பொது நம்பிக்கையாளர் அல்லது பிரதி பொது நம்பிக்கையாளர் பண்னிரெண்டிலிருந்து பதினைந்து வரையிலான **ஆண்டுகள்** அனுபவங்களை உடைய சட்டத்தரணியாக இருத்தல் அவசியம். கட்டளைச் சட்டத்தின் கீழ் பகிரப்பட்ட பெரும்பாலான செயல்பாடுகள் மற்றும் கடமைகள் சட்ட பிண்ணணி மற்றும் பெரும்பாலும் சிவில் சட்டம் சார்ந்ததாக அமையும்.

#### 6.5.1 சட்ட பிண்ணணி

ஸ்ரீ லங்கா பொது நம்பிக்கையாளர் அலுவலகம் 1988ம் ஆண்டின் 61ம் இலக்கம் மற்றும் 1983ம் ஆண்டின் 41 வது இலக்க சட்டம் மற்றும் 1975ம் ஆண்டு இலக்கம் 25 மற்றும் 1973ம் ஆண்டு இலக்கம் 44 மற்றும் 1938ம் ஆண்டு இலக்கம் 59 மற்றும் 1931ம் ஆண்டின் 11ம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் 1922 ம் ஆண்டின் 1வது இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது. பொது நம்பிக்கையாளர் இந்த கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இதன்கீழ் உள்ள சட்டங்களுக்கு கட்டுப்பட்டு அந்த நாமத்தின் கீழ் நியமிக்கப்பட்டு செயற்பட தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

ஸ்ரீ லங்காவில் நம்பிக்கை நிதியங்கள் சட்டம் 1971ம் ஆண்டு 30ம் இலக்கம் மற்றும் 1968ம் ஆண்டு சட்ட இலக்கம் 7 மற்றும் 1934ம் ஆண்டு 1ம் இலககம் மற்றும் 1918ம் ஆண்டு 4ம் இலக்க கட்டளைச் சட்டம் மூலம் திருததப்பட்ட 1917ம் ஆண்டு நம்பிக்கை நிதிய கட்டளை சட்டம் இலக்கம் 9ன் கீழ் கட்டுப்படுத்தப்பட்டள்ளது. மேலும் நம்பிக்கை நிதியங்களின் 2ம் பிரிவுக்கு அமைய இந்த கட்டளை சட்டம் அல்லது எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட். ஏற்பாடுகள் செய்யப்படாதிருப்பவை பங்குகளின் கொள்கையால் இங்கிலாந்தின் மேல் நீதி மன்றத்தில் தற்போதைக்கு அமுலில் இருக்கும்போது தீர்மானிக்கப்படும்.

## 6.5.2 பொது நம்பிக்கையாளரது பொதுவான ஆட்சியுரிமை மற்றும் பணிகள்

பொது நம்பிக்கையாளர், பொது நம்பிக்கையாளர் கட்டளை சட்டம், குடியியல் நடைமுறை சட்டக்கோவை, நீதித்துறை சட்டம் மற்றும் ஏனய சட்டங்கள் என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நியமிக்கப்பட மற்றும் அந்தப் பெயரின் கீழ் செயல்பட தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.

1. ஒரு சாதாரண நம்பிக்கையாளராகவும் மற்றும் பாதுகாப்பு வளங்கும் நம்பிக்கையாளராகவும் இருத்தல் அவசியம்.
2. ஒரு திரட்டுவதற்கான கட்டளையின் கீழ் ஆஸ்திகளை சேகரிப்பவராக
3. ஒரு பராயம் அடையாதவரது ஆஸ்தியின் மேற்பார்வையாளராகவும் மற்றும் சரியான மனநிலை அற்ற நபர் அல்லது பராயம் அடையாதவருக்கு குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் அத்தியாயம் XXXV கீழ் நடவடிக்கைகளுக்காக ஒரு அடுத்த நண்பர் அல்லது பாதுகாவலர் இருத்தல
4. சரியான மனநிலை அற்ற ஒரு நபரது ஆஸ்திக்கு ஒரு மேற்பார்வையாளராக (மாவட்ட நீதிமன்றத்தினால் ஒப்படைக்கப்படுமபோது)
5. பரஸ்பர இணக்கத்துடன் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தின் பிரகாரம் அசையா சொத்துக்களின் முகாமையாளராக 9ஆயினும் பாதுகாப்பாளர் நம்பிக்கையாளராக நியமிக்கப்பட்ட பொது நம்பிக்கையாளர் முகாமைத்துவ அதிகாரங்களை செயற்படுத்த அல்லது மேளாண்மை நம்பிக்கையாளர்கள் சபையில் சிறப்பு அதிகார ஆற்றல் வழங்கப்பட்டிருந்தால்)
6. பணத்தை பெறுவதற்கும் மற்றும் செலுத்தவதற்குமான நோக்கத்திற்காக ஸ்ரீலங்காவில் இல்லாத நபர்களது தத்துவக்காரராக
7. குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் கீழ் பொது நம்பிக்கையாளர ஒரு ஆஸ்த்தியின் பொருத்தமான முகாமையாளராக கருதப்படுவார்
8. குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் கீழ் உயில் எழுதப்படாத ஆஸத்திக்கு ஒரு மேற்பார்வையாளராக
9. சிறையில் தண்டணை அனுபவிக்கும் நபரது ஆஸ்திகளுக்கு ஒரு பாதுகாவலர் நம்பிக்கையாளராக
10. பொது நம்பிக்கையாளர் எந்த ஒரு உயிருடன் உள்ள நபரின் கடைசி விருப்பு ஆவணத்தை பாதுகாப்பாக வைக்கும் நோக்கத்திற்காக பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.
11. பொது நம்பிக்கையாளர் கோவில் சொத்து சுவீகரிக்கப்பட்டதிற்கான நஷ்ட ஈட்டின் ஒரு நம்பிக்கையாளராக

#### 6.5.3 பொதுநம்பிக்கை கட்டளைச்சட்ட திருத்தங்கள் மற்றும் எழுத்துமூல சட்டங்களின் கீழ் பொது நம்பிக்கையாளருக்கு வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் கடமைகள்

ஏனய எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் பொதுநம்பிக்கையாளர் கட்டளைச்சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின் ஏற்பாடுகளின் கீழ் பின்வரும் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் பொது நம்பிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 1988ம் ஆண்டு சட்ட இலக்கத்தினால் திருத்தப்பட்ட பொது நம்பிக்கையாளர் கட்டளைச்சட்டத்தின் 10ஏ பிரிவின் கீழ் பொது நம்பிக்கையாளர் வெளிநாட்டில பணிபுரியும் ஒருவர் மரணித்தமைக்காக பெறப்பட்ட நஷ்டஈட்டை அவரது ஆதரவில் தங்கி உள்ளவர்கள் மற்றும் அல்லது உரிமையாளர்களுக்கு பங்கிட்டு வழங்கும் ஒரு அமைப்பாக செயல்படுவார். மேலும் ஸ்ரீ லங்காவை விட்டு வெளியில் தொழிலுக்காக செல்லும் ஸ்ரீலங்கா பிரஜைகள் பொது நம்பிக்கையாளருடன் அவர்கள் தொழிலில் இருக்கம்போது மரணிக்கும் சம்பவத்தில் நஷ்டஈடுகளை சிறந்தமுறையில் சீராக வழங்கும் நோக்கத்திற்காக பதிவு செய்துகொள்ளவேண்டும்.
- 1988ம் ஆண்டு சட்ட இலக்கம் 61ன் கீழ் பௌத்த ஆலயங்கள் தொடர்பான நஷ்டஈடு கொடுப்பனவு
- 1973ம் ஆண்டு எசோசியேட்டட் நியூஸ்பேப்பர் ஒப் சிலோன் லிமிட்டட் சட்ட இலக்கம் 28ன் கீழ் எசோசியேட்ட் நியூஸ்பேப்பர் ஒப் சிலோன் லிமிட்டட் வின் பங்குகள் அரசாங்கத்தின் நன்மைக்காக பொது நம்பிக்கையாளர் அதிகாரத்தில் விடப்படும்.

### 6.5.4 பொதுநம்பிக்கையாளரது சேவைகள்

பொது நம்பிக்கையாளர் நீதிமன்றத்தின் வழிநடத்துதலுடன் அல்லது தீர்மானத்துடன் அல்லதுநிதியங்கள் மற்றும் இறுதி விருப்பு ஆவணங்களின் நோக்கங்களுக்கு அமைவாக பொதுமக்களுக்க சேவை செய்வார்.

- கல்விகளில் நிதி கஷ்டங்களை எதிர்கொள்ளும் திறமை வாய்ந்த பிள்ளைகளுக்கு புலமைபரிசுகள் வழங்கல்
- அத்தியாவசிய மற்றும் மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படும் நோயாளிகள் மருததுவ சிகிச்சைக்கான ஏற்பாடுகள்
- நிதியங்கள் மற்றம் அல்லது இரதவிருப்பு ஆவணம் எனபனவற்றின் நோக்கங்களின்படி சமயம் சார்ந்த இடங்களை மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் விருத்தி செய்யவும் நிதி உதவி வழங்குதல்.
- தேவைப்படும் நபர்கள் மற்றும் அல்லது நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்குதல்
- சமய நடவடிக்கைகள் மற்றும் பலவித காரணுங்களுக்காக உதவியை எதிர்பார்த்து உள்ள நபர்களுக்கு நன்கொடைகள் வழங்குதல்
- பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கு அமைவாக பௌத்த உலகியல் சார்ந்த கட்டளைகள் சட்டத்தின் கீழ் நஷ்டஈடுகள் பங்கிடுதல்
- பண்ணை சொத்துக்கள் அல்லது நம்பிக்கை நிதி முகாமைத்துவம்
- கல்வியில ஈடுபட்டுள்ள பண கஷ்டங்களுடன் உள்ள திறமையான சிறார்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தில் பெறப்பட்ட வருமானத்திலிருந்து புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- ஏசோசியேட்டட் நியூஸ்பேப்பர் ஒப் சிலோன் லிமிட்டட்டிலிருந்து இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் தலைவரை நியமித்தல்
- பிறநாட்டு நஷ்டஈடுகளை வழங்குதல்
- பௌத்த ஆலயங்களுக்கு நஷ்டஈட்டை பங்கிடுதல்
- தனிப்பட்ட நம்பிக்கைப் பொறுபுகளுக்காக அறவிடப்பட்ட முகாமைத்துவக் கட்டணங்களை மாற்றுதல். (பொது நம்பிக்கையாளரால் அறவிடப்பட்ட சட்டமுறை வருமானமாக ரூபா 2,349,311.22 பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.)

### 6.5.6 நம்பிக்கைப் பொறுப்பு மரண சாதனங்களின் எண்ணிக்கை

2015.12.31 ஆம் திகதி திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புக்களின் எண்ணிக்கை 1044 என்பதுடன், திணைக்களத்தின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற மரணசாதனங்களின் எண்ணிக்கை 137 ஆகும். நம்பிக்கைப் பொறுப்புக்களை ஆரம்பித்த கொடையாளர்களின் நோக்கங்களுக்கிணங்க சம்பந்தப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

| ஆண்டு | அமுல்படுத்தப்படுகின்ற நம்பிக்கை பொறுப்புகளின் எண்ணிக்கை | அமுல் படுத்தப்படுகின்ற மரணசாதனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011 | 981 | 119 |
| 2012 | 999 | 126 |
| 2013 | 1019 | 130 |
| 2014 | 1034 | 134 |
| 2015 | 1044 | 137 |

### 6.5.7 பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ள நிதியின் அளவு

பொது நம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்திற்கு உரித்தாக்கபட்டுள்ள மற்றும் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணசாதனங்களுக்குத் தொடர்புடைய பொது நம்பிக்கை பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற மூலதன, முதலீட்டு வருமானக் கட்டணங்கள் மற்றும் பிறகட்டணங்கள் பின்வருமாறு பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

| ஆண்டு | தொகை (ரூபா) |
|---|---|
| 2011 | 3,783,187.40 |
| 2012 | 6,543,360.52 |
| 2013 | 6,396,102.51 |
| 2014 | 6,675,487.77 |
| 2015 | 10,188,334.08 |

2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையிலான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | ஏற்பாடுகள் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 45,450,000 | 41,352,337 |
| மூலதனச் செலவினம் | 2,905,000 | 2,727,038 |
| **மொத்தம்** | **48,355,000** | **44,079,375** |

## 6.6 கடன் இணக்க சபை திணைக்களம்

**நோக்கு**

அசையா சொத்து சம்பந்தப்பட்ட கடனை திருப்பி செலுத்துவதற்கு பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு ஒரு நிவாரண ஏற்பாட்டை வழங்குதல்.

**செயற்பணிகள்**

கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீது பெறப்பட்ட கடன்களை குறைந்த வட்டி வீதத்துடன் தவணைமுறையில் செலுத்துவதன்மூலம் பிணையாக வைக்கப்பட்ட விவசாய நிலங்கள், வீடு போன்ற அசையா சொத்துக்களை திரும்பப் பெறுவதற்கு கடன்பட்டோருக்கு சட்டப் பாதுகாப்பையும் உதவியையும் வழங்கல்

**குறிக்கோள்**

அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீதான கடன்களை மீளச் செலுத்துவதன்மீது தீர்வொன்றை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உதவுதல்.

1941ம் ஆண்டின் 39 ம் இலக்க கடன் இணக்க சபை கட்டளைச்சட்டத்தின் கீழ் இத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இத் திணைக்களமானது காணி, நெல்வயல்கள், பெருந்தோட்டங்கள், வீடுகள் போன்ற அசைவற்ற ஆதனங்களின் உறுதியை நிபந்தனையுடன் பிணைவைத்து பெற்றுக்கொண்ட கடன்களின் மூலமும் சத்தியக்கடதாசி மற்றும் காசோலை போன்ற ஆவணங்களின்மீது பெறப்பட்ட பிணையற்ற கடன்களின் மூலம் ஏற்பட்ட கடன்சுமைக்கு உள்ளான மக்களுக்கு ஏதாவது நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

1999ம் ஆண்டின் 29ம் இலக்க திருத்த சட்டம் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அறுதியுறுதிகளின் மீது இச்சபை இடையீடு செய்வதற்கு வழிவகுத்து இதன் நிவாரண உதவி நடவடிக்கைகளை மேலும் விரிவடையச் செய்துள்ளது.

கடன் இணக்க சபையானது அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐந்து (5) உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் அவரில் ஒருவர் சபையின் தலைவராக அமைச்சரால் நியமிக்கப்படுவார். சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு எந்தவித கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை. அத்துடன் இச்சபையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு முத்திரைத் தீர்வை எதுவும் கிடையாது. வர்த்தமானி மற்றும்

அறிவித்தல் கட்டணமாக ஒரு சிறிய தொகை மாத்திரமே அறவிடப்படுகிறது. ஆகவே கடன் சுமையால் பாதிக்கப்பட்ட சராசரி நபரொருவருக்கு மிகப்பெரிய சேவையொன்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் சட்டத்தரணிகள் மூலம் தம்மை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியது கட்டாயமில்லாதிருப்பது பொதுமக்களுக்கு ஆறுதலாக உள்ளது.

இச்சபையின் நடைமுறை நீதிமன்ற நடைமுறையிலிருந்து வேறுபட்டது. இச்சபையில் எட்டப்படும் உடன்படிக்கைகள் கட்சிக்காரர்களினது இணக்கத்துடன் ஏற்படுவதேயன்றி சபையின் பணிப்பின்மூலம் அமுல்படுத்தப்படுவதல்ல. ஆயினும் கடன் இணக்க சபைக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப கடனாளிக்கு நியாயமற்ற முறையிலான வட்டித் தொகையொன்றை செலுத்த வேண்டியிருப்பின் அத் தொகையை குறைப்பதற்கும் சபையினால் வழங்கப்படும் யோசனையை கட்சிக்காரர்கள் ஏற்க மறுக்கும் சந்தர்ப்பத்தில் இக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கடன்பட்டோருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்கவும் இச் சபைக்கு அதிகாரம் உள்ளது. மேலும் கடன் கொடுத்தோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட சபையின் கடைசி விசாரணைக்கு ஆஜராகத்தவறும் சந்தர்ப்பத்தில் நிபுணத்துவ விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு அதன்பின் சான்றிதழ் ஒன்று வழங்கப்படும். எவ்வாறெனினும் கடன் கொடுத்தவர் வேண்டுமென்றே விசாரணையில் கலந்து கொள்ள தவறிவிட்டார் என சபை திருப்திப்பட்டால் மட்டுமே பதிவு தபால் மற்றும் கிராம் அலுவலர் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் நிபுணத்துவ விசாரணை ஒன்று நடைபெறும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அத்தகைய சான்றிதழ் வழங்கப்படுவதன் பயன் கடன்பட்டோருக்குக் கிடைக்கும். நீதிமன்றத்தில் அந்த விடயம் சம்பந்தமாக வழக்கு விசாரணை ஒன்று நடைபெறும் சந்தர்ப்பத்தில் இச் சான்றிதழை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால் கடன் செலுத்துவதற்கு அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை கால அவகாசம் வழங்குவதற்கும் வட்டியை குறைந்த வட்டி விகிதமாக மாற்றுவதற்கும் கடன் இணக்க கட்டளைச்சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**2015.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| விபரம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| முன்கொண்டு-வரப்பட்ட விண்ணப்பங்கள் 2015.01.01 | 788 |
| புதிய விண்ணப்பங்கள் | 417 |
| மீளாய்வுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 44 |
| மொத்த விண்ணப்பங்கள் 2015.12.31 | 1,249 |
| தீர்க்கப்பட்ட விண்ணப்பங்கள் | 179 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 172 |
| மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | 29 |
| சான்றிதழ் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | 11 |
| மீளப்பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 24 |
| நடவடிக்கை எடுக்கப்பட்டமொத்த விண்ணப்பங்கள் | 415 |
| 2015.12.31 இல் உள்ளவாறான மிகுதி விண்ணப்பங்கள் | 834 |

**2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம் (231-01-01)**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 11,000,000 | 8,887,647 |
| மூலதன செலவினம் | 1,000,000 | 493,008 |
| **மொத்தம்** | **12,000,000** | **9,380,655** |

## 6.7 சட்ட உதவி ஆணைக்குழு

1978ம் ஆண்டின் 27ம் இலக்க சட்ட உதவி சட்டத்தினால் சட்ட உதவி ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இலங்கையில் தகுதியுடைய மக்களுக்கு இலவசமாக சட்ட உதவிகளை பெற்றுக் கொடுப்பது இதன் தலையாய நோக்கமாகும். குறைந்த வருமானத்தை பெறுகின்ற மக்களினது வழக்கு நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக இலவச சட்டத்தரணி உதவிகளை பெற்று கொடுப்பதும் சட்ட ஆலோசனைகளை பெற்று கொடுப்பதும் சமுதாயத்திற்கு சட்டம் பற்றிய விழிப்புணர்வை அளிப்பதும் இதன் பணிகளாகும். நீதிமன்றம் மற்றும் பிற மன்றங்களில் பிரதிநிதித்துவப்படுத்துதல் உட்பட பின்வரும் பிரிவுகளின் கீழ் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **சட்டப்பிரிவு: தகுதியுடைய மக்கள் சார்பாக சட்ட உதவி நீதிமன்ற பிரதிநிதித்துவம்**

நேரடியாக தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கொழும்பு சட்ட உதவி நிலையம் உள்ளடங்கலாக 77 சட்ட உதவி நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இச் சட்ட உதவி நிலையங்களின் பிரதான பணி வழக்காடுவதாகும். தகுதியுடைய மக்களுக்கு அதாவது ரூபா. 15,000 அல்லது அதற்குக் குறைவான மாதாந்த வருமானம் பெறுவோருக்கு சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. விசேட சந்நர்ப்பங'களில் இவ் வருமாண எல்லை தளர்த்தப்படும். உதாரணமாக பெண்கள் தமக்கு அல்லது தமது பிள்ளைகளுக்கு ஜீவனாம்சத்தைக் கோரும்போது அவர்களது வருமானத்தைக் கருத்தில் கொள்ளாது அவர்களுக்காக நீதிமன்றத்தில் ஆஜராவதன்மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றது.

**சட்ட உதவி ஆணைக்குழுவினால் கையாளப்பட்ட வழக்குகள்**

| விபரம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2013 ம் ஆண்டிலிருந்து முன்கொணரப்பட்டவை | 20,625 |
| புதிதாக சேர்ந்த வழக்குகள் (சனவரி 2015 - டிசம்பர் 2015) | 10,449 |
| முடிவுற்ற வழக்குகள் (சனவரி 2015 - டிசம்பர் 2015) | 7,465 |
| அடுத்த மாதத்திற்குக் (செப்ரம்பர்) கொண்டுசெல்லப்பட்டவை | 23,609 |
| சட்ட உதவி ஆணைக்குழுவினால் (சேவை வழங்கப்பட்ட மொத்த சேவை நாடுனர்கள் (சனவரி 2015 - டிசம்பர் 2015) | 76,579 |

**ஊடக நிகழ்ச்சிகள்**

- **தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள்**
  பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளின் அழைப்பின் பெயரில் சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலர்கள் சட்டம் சம்பந்தமான பல்வேறு நிகழ்ச்சிகளை பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நடாத்தினார்கள். 2015 டிசம்பர் வரை பல தொலைக்காட்சி அலைவரிசைகளில் (கொழும்பு ரீவீ, சியத ரீவி மற்றும் ஹிரு ரீவி) பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- **புதினப் பத்திரிகைகளில் வினா விடை பகுதிகள்**
  இச் சேவை மக்கள் தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சட்ட அறிவை மேம்படுத்துவதற்குமான இன்னொருவிதமான உதவியாகும். மேலும் சட்ட உதவிப் பக்கங்கள் சட்ட விடயங்கள் சம்பந்தமான ஆசிரியர் தலையங்கங்களையும் கொண்டுள்ளன.

- **விழிப்புணர்வு மற்றும் மேலதிக திட்டங்கள்**
  சட்ட கிளினிக்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் சட்ட உதவி ஆணைக்குழுவின் ஒரு ஒருங்கிணைந்த பகுதி ஆகும். 2015 டிசம்பர் வரை சுமார் 219 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. நடாத்தப்பட்ட நிகழ்ச்சிக்களில் பெரும்பாலானவை திரட்டு நிதியின் மூலம் நடத்தப்பட்டன.

**விசேட பிரிவுகள்- அபிவிருத்தி சட்ட உதவி கருமபீடம்**

- **புலம்பெயர்ந்த தொழிலாளர் உரிமை பிரிவு**

சம்பந்நப்பட்ட காலப்பகுதியில் இப்பிரிவு பிரச்சினைகளை எதிர்கொண்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது. ஆலோசனைகளைத் தொடர்ந்து அந்நபர்கள் வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவுக்கோ அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கோ அனுப்பப்பட்டனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன: சம்பளம் கொடுக்கப்படாமை, பாலியல் தொல்லை, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வெளிநாடுகளில் மரணமடைதல், இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படல்.

- **மறியற்காரர் உரிமைகள் பிரிவு**

தடுத்துவைக்கப்பட்டுள்ள மறியற்காரர்களின் உறவினர்கள் சட்ட உதவி தேவைப்படின் ஏதாவதொரு சட்ட உதவி நிலையத்தை நாடி உதவியைப்பெறலாம். பெரும்பாலும் மறியற்சாலை திணைக்களத்தின் அலுவலர்கள் வழக்குகளை சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு அனுப்புகிறனர். 2015 சனவரி தொடக்கம் 2015 டிசம்பர் வரை யான காலப்பகுதியில் 40 சிறைச்சாலை அலுவலர்களுக்கு சட்ட விழிப்புணர்வு ஒன்னு நடாத்தப்பட்டது. சட்ட உதவி ஆணைக்குழு அலுவலர்களின் தலையீட்டினால் 244 மறியற்கார்ரகளுக்காக பிணை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்'கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

- **பயிலுநர் சட்டத்ரணிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

  ஆண்டொன்றில் இரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. அது சுய நிதி நிகழ்ச்சித்திட்டமொன்று என்பதுடன் கலந்துகொன்பவர்களிடமிருந்து மண்டபக்கட்டணம், பாடநெறிகளைத் தயார்செய்வதற்கான பிரதான செலவுகள் என்பவற்றுக்காக மாத்திரமே பணம் அறவிடப்படுகின்றது. இவ்வாண்டினுள் 3 குழுக்களின் 761 பயிலுநர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்

- **சட்டக்கல்வித் தராதரப் பாடநெறி**

அது ஒருசுய நிதி நிகழ்ச்சித்திட்டமாகும். கலந்துகொன்பவர்களிடமிருந்து மண்டபக்கட்டணம்,வெளிவாரி விரிவுரையாளர'களுக்கான கொடுப்பனவு என்பவற்றுக்காக மாத்திரமே பணம் அறவிடப்படுகின்றது. இவ்வாண்டினுள் 56 பேர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

- **ஆதிவாசி மக்களின் உரிமைகளுக்கான நிகழ்ச்சித்திட்டம்**

ஆதிவாசி மக்களின் உரிமைகள், போதைவஸ்து நிவாரண நிகழ்ச்சித்திட்டம், சுகாதார வைத்தியர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம், ஏச்.ஐ.வீ.யுடன் வாழ்பவர்கள், பாலியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக விரிவான கருத்திட்டங்கள் 2016ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதுடன் இவற்றின் ஆரம்பத்தில் 4 நான்கு வெவ்வேறன நிகழ்ச்சித்திட்டங்கள் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டன.

- அலுவலர்கனைப் பயிற்றுவித்தல்

உள்நாட்டுப்பயிற்சிகள் மாத்திரமே இவ்வான்டில் வழங்கப்பட்டன.

| அலுவலர்கள் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| சட்ட அலுவலர்கள் | குடியியல் வழக்கு விசாரணைகள் சம்பந்தமாக | 120 |
| சட்ட அலுவலர்கள் | கணினி டிப்ளோமா பயிற்சி | 50 |
| சட்ட அலுவலர்கள் | குடியியல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் | 120 |
| சட்ட அலுவலர்கள் | முகாமைத்துவப் பயிற்சி | 15 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | தலைமைத்துவப் பயிற்சி | 10 |
| | ஆங்கில மொழி | 10 |

**2015.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம் (110/01/02)**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் (1503) | 174,000,000 | 158,500,000 |
| மூலதன செலவினம் (2201) | 25,000,000 | 11,600,000 |
| **மொத்தம்** | **199,000,000** | **170,100,000** |

## 6.8 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு

1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் மூலம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. அதன் கீழ் இலங்கையின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மத்தியஸ்த சபைகளைத் தாபிக்க ஆரம்பிக்கப்பட்டது. இது நீதிமன்றச் செயற்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் பிணக்குளைத் தீர்க்கும் மாற்று வழிமுறையொன்றாக நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற பிணக்குகளில் சிறு பிணக்குளைத் தீர்ப்பதற்காகத் தயார் செய்யப்பட்ட மிகப்பெறுமதியான செயற்பாடொன்றாக அறிமுகம் செய்யலாம். இதுவரை இலங்கை முழுவதிலும் 329 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தாபிக்கப்பட்டுள்ள மத்தியஸ்தர்கள் குழாத்துக்களில் சுமார் 8266 மத்தியஸ்தர்கள் சுயேச்சையுடன் பணி புரிகின்றனர்.

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு 05 உறுப்பினர்ளைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் அதிமேதகு சனாதிபதியால் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்படுகின்றனர். மத்தியஸ்தர்களை நியமித்தல், மாற்றஞ் செய்தல் மற்றும் அவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்றவற்றிற்கான அதிகாரம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவிடம் உள்ளது.

மத்தியஸ்த செயற்பாட்டின் மூலம் இரு திறத்தவர்கள் அல்லது அதற்கு மேற்பட்டோர்களுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குளைத் தீர்த்துக் கொள்வதற்காக மூன்றாம் திறத்தவராக மத்தியஸ்தர்கள் செயற்படுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டிலும் மத்தியஸ்த சபைகளிடம் ஆற்றுப்படுத்தப்படுகின்ற பிணக்குகளின் அதிகரிப்பானது சமுதாயம் தமது பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இலகுவான மற்றும் குறைந்த செலவுப் பொறிமுறையொன்றாக மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளமைக்கு சான்றாகவுள்ளது. மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படும் பிணக்குகளின் எண்ணிக்கை நூறாயிரத்தை விட அதிகதித்துள்ளமை இதனை நிரூபிக்கிறது.


**2015.01.01 - 2015.12.31 வரையிலான முன்னேற்றம்**

| | பிணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தல் | 191,543 |
| தீர்க்கப்பட்டவை | 91,646 |
| நூற்று வீதம் | 47.85% |

- 2015.12.31 ஆம் திகதியின் போது ஐந்து நாள் செயலமர்வுகள் 24 நடாத்தப்பட்டு 1,2000 மத்தியஸ்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

- நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களால் சமுதாய மத்தியஸ்தம், பாடசலை மத்தியஸ்தம் மற்றும் பிற புரிந்துணர்வை அளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. அவர்கள் 20 ஐந்து நாள் பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள், 32 ஒரு நாள் பாடசலை நிகழ்ச்சித் திட்டங்கள், 03 ஐந்து நாள் பிற நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 150 ஒரு நாள் பிற நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றை நடாத்தியுள்ளனர்.

**2015.01.01 – 2015.12.31 மாகாண மட்டத்தில் மத்தியஸ்த சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள பிணக்குகள்**




**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் முன்னேற்றம்**

| | |
|---|---|
| நடாத்தப்படவேண்டிய நேர்முகப் பரீட்சைகள் | 62 |
| நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் | 53 |
| நூற்று வீதம் | 85% |

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ள மத்தியஸ்தர்கள் குழாங்கள்**

| தொ.இல. | மாவட்டம் | மத்தியஸ்தர்கள் குழாம் |
|---|---|---|
| 1 | கம்பஹா | நீர்கொழும்பு |
| 2 | காலி | ஹிக்கடுவ, அல்பிட்டிய, பலபிட்டிய |
| 3 | மாத்தறை | ஹக்மன, திககொட, திக்வெல்ல, கொட்டபொல, பஸ்கொட |
| 4 | அம்பாந்தோட்டை | அங்குணகொலபலெஸ்ஸ, லணுகம்வெஹர, வலஸ்முல்ல |
| 5 | குருநாகல் | கெபயிகனே, நாரம்மல, கல்கமுவ |
| 6 | கண்டி | நாவலப்பிட்டி, தொலுவ, ஹதரலியத்த, யட்டிநுவர, பாததும்பர, |
| | | ஹசலக |
| 7 | மாத்தளை | ரத்தோட்ட, பல்லேபொல |
| 8 | இரத்தினபுரி | வெலகெபொல, எஹலியகொட, இம்புல்பெ, கொலொன்ன |
| 9 | கேகாலை | மாவனெல்ல |
| 10 | பொலனறுவை | ஹிங்குரக்கொட, தமன்கடுவ |

| | | |
|---|---|---|
| 11 | மொனராகலை | படல்கும்புர, சியம்பலாண்டுவ, மடுல்ல, மெதகம, பிபில, |
| | | தணமல்வில, கதிர்காம்ம், |
| 12 | யாழ்ப்பாணம் | உடுவில், சண்டிலிப்பாய் |
| 13 | வவுனியா | வவுனியா தெற்கு |
| 14 | திருகோணமலை | மொரவெவ |
| 15 | நுவரெலியா | நுவரெலியா |
| 16 | புத்தளம் | ஆராச்சிகட்டுவ, முந்தல் |
| 17 | களுத்தறை | மதுகம, புலத்சிங்கள, ஹொறணை, அகலவத்தை |
| 18 | அநுராதபுரம் | கஹட்டகஸ்திகிலிய |
| 19 | பதுளை | மஹியங்கனை |

விசேட வகுதிகளின் பிணக்குகள் சம்பந்தப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாங்கள்

| தொ.இல. | மாவட்டம் | மத்தியஸ்தர்கள் குழாம் |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 2 | கிளிநொச்சி | கிளிநொச்சி |

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள மத்தியஸ்தர்கள்** குழாங்கள்

| தொ.இல. | மாவட்டம் | மத்தியஸ்தர்கள் குழாம் |
|---|---|---|
| 1 | கொழும்பு | ஹோமாகம, இரத்மலானை, மொரட்டுவ, கெஸ்பேவ, கொலான்னாவ |
| 2 | கம்பஹ | கம்பஹ, வேகே, பியகம, மகர, அத்தனகலை |
| 3 | காலி | யக்கலமுல்ல, நியாகம, அல்பிட்டிய, பலபிட்டிய |
| 4 | மாத்தறை | மாலிம்பட, கம்புறுபிட்டிய, திககொட |
| 5 | அம்பாந்தோட்டை | வீரகெட்டிய,பெலிஅத்த, திஸ்ஸமகாராமய, அம்பலாந்தோட்டை |
| 6 | குருநாகல் | குளியாப்பிட்டி, பொல்பித்திகம, நாரம்மல, கொபைகனே |
| 7 | கேகாலை | எட்டியாந்தோட்டை, தெஹிஓவிட்ட |
| 8 | அநுராதபுரம் | நாச்சாதூவ, பதவிய, மனுவ, கெபிதிகொல்லேவ |
| 9 | பதுளை | பசறை |
| 10 | மொனராகலை | மடுல்ல, படல்கும்புர, சியம்பலாண்டுவ |
| 11 | யாழ்ப்பாணம் | கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், பருத்தித்துறை, தெல்லிப்பளை, நெடுந்தீவு |
| 12 | அம்பாறை | தெஹியத்தகண்டிய, பதியதலாவ, தமன, திருக்கோவில், |
| | | காரைதீவு, நிந்தவூர் |
| 13 | இரத்தினபுரி | எஹலியகொட |
| 14 | பொலனறுவை | ஹிங்குரக்கொட, தமன்கடுவ |
| 15 | திருகோணமலை | மொரவெவ |

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை நிதி முன்னேற்றம்** **(110-01-01-03)**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 241,900,000 | 228,602,794 |
| மூலதனச் செலவினம் | 1,690,000 | 1,278,100 |
| **மொத்தம்** | **243,590,000** | **229,880,894** |

## 6.9 தொழில் நியாயசபை செயலாளர் அலுவலகம்

**நோக்கு**

அரசு சாரா ஊழியர்களின் வேலைப் பாதுகாப்புக்கான உத்தரவாதம்"

**செயற்பணிகள்**

"விரைவானதும், நீதியானதும், திறமையான நிர்வாகத்தின் மூலமும் ஆற்றல் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களின் உதவியுடனும் அரசு சாரா ஊழியர்களின் வேலைப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தல்"

தொழில் நியாய சபைகளின் தலைமை அலுவலகம் இல, 428/11 A, டென்சில் கொபேகடுவ மாவத்தை பத்தரமுல்லயில் உள்ள நீதி அமைச்சின் கட்டிடத்தில் அமைந்துள்ளது.

1957ம் ஆண்டின் 62ம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31 (ஆ) பிரிவின் பிரகாரம் பெறப்படும் பிணக்குகளை விசாரித்து கையுதிர்வு செய்தல் தொழில் நியாய சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதான பணியாகும். அரசு சாரா நிறுவனங்களில் ஊழியர்களை வெளியேற்றுதல், போன்ற சம்வங்களின்போது நீதியை பெற்றுக்கொடுக்கும் நிறுவனமென தொழில் நியாய சபையை வரையறை செய்யலாம் என்பதுடன் இது அத்தகைய திறத்தினருக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாகும். தொழில் நியாய சபை தலைமை அலுவலகத்தின் கீழ் 37 தொழில் நியாயசபைகள் செயற்படுகின்றன. அவை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு - 06 | கண்டி - 01 | அவிஸாவளை - 01 | பலாபத்வெல - 01 |
| இரத்மலானை - 01 | நாவலப்பிட்டிய - 01 | கடுவெல - 01 | மகரகம - 01 |
| ஹற்றன் - 01 | தலவாக்கலை - 01 | வத்தளை - 01 | நுவரெலியா - 01 |
| கம்பஹா - 01 | பதுளை - 01 | நீர்கொழும்பு - 02 | பண்டாரவளை - 01 |
| பாணந்துறை - 01 | அம்பாறை - 01 | களுத்துறை - 01 | மட்டக்களப்பு - 01 |
| காலி - 01 | திருகோணமலை - 01 | மாத்தறை - 01 | சிலாபம் - 01 |
| கொட்டபொல - 01 | அனுராதபுரம் - 01 | இரத்தினபுரி - 01 | குளியாபிட்டிய - 01 |
| கேகாலை - 01 | பலாங்கொடை - 01 | குருநாகல் - 01 | |

தொழில் நியாய சபைகளைப் பேணுவதற்குத் தேவையான மனிதவளங்கள், கூட்டு வளங்கள் மற்றும் நிதிவளங்கள் ஆகியவற்றை வழங்குதலும் முகாமைசெய்தலும் தொழில் நியாய சபைகளின் தலைமை அலுவலகத்தின் பிரதான பணிகளாகும். அதன்பிரகாரம் தொழில் நியாய சபை தவிசாளர்கள் தவிர்ந்த ஏனைய எல்லா அலுவலர்களினதும் தாபன மற்றும் நிருவாக பணிகள் மற்றும் தொழில் நியாய சபை தவிசாளர்கள் உட்பட எல்லா அலுவலர்களினதும் வேதனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உட்பட எல்லா நிதி முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டுப் பணிகளும் தொழில் நியாய சபைகள் தலைமை அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| 2015.01.01 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2015.01.01தொடக்கம் 2015.08.31 வரை | | 2015.08.31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|
| | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகள் | |
| 4,818 | 2,529 | 2,344 | 5,003 |

- தொழில் நியாய சபைத் தவிசாளர் ஒருவருக்கும் கணக்காளர் ஒருவருக்கும், 8 தொழில் நியாய சபை உரைபெயர்ப்பாளருக்கும், 27 களுக்கும், அ.மு.உ.சேவையின் 70 உத்தியோகத்தர்களுக்கும், 26 அலுவலக சேவை உத்தியோகத்தர்களுக்கும் 2015 சனவரி தொடக்கம் டிசம்பர் 31 வரையிலான காலத்துள் 13 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- 2015.12.31 இல் அங்கீகரிக்கப்பட்ட சுருக்கெழுத்தாளர் பதவி 118 ஆகும். இதில் 100 அலுவலர்கள் ஏற்கனவே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிய அலுவலரைளைச் சேர்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.
- 2015.12.31 இல் அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்றப் பாதுகாவலர் பதவி 30 ஆகும். இதில் 25 அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.
- வடமாகாணத்தை உள்ளடக்கும் வகையில் யாழ்மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில் நியாய சபைக்கு பதவிகளை உருவாக்குவதற்கு முகாமைத்துவசேவைப்பணிப்பாளர் நாயகம் 2016.01.16 ம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரமளித்தார்.

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான நிதி ரீதியான முன்னேற்றம்**

**(228-01-02)**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 291,433,000 | 285,064,308 |
| மூலதன செலவினம் | 12,592,0000 | 9,856,996 |
| **மொத்தம்** | **304,025,000** | **294,921,304** |

## 6.10 நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம்

**நோக்கு**

இந் நிறுவனம் நீதி அமைச்சின் கீழ் செயற்படுவதால் நீதி அமைச்சின் நோக்கு இந் நிறுவனத்திற்குத் தொடர்புடையது.

**செயற்பணிகள்**

பொதுமக்களுக்கு விரைவான சிறந்த சேவையை வழங்குவதை பிரதான நேக்கமாகக் கொண்டு நீதித்துறை அலுவலர் தவிர்ந்த நீதிச் சேவையிலுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத அலுவலர்களுக்கு நீதிமன்ற வழக்குகளை விசாரணை செய்து முடித்துக் கொள்ளும் செயல்பாட்டில் ஏற்படும் தாமத்த்தை சமாளிப்பதற்கு பயிற்சியளிப்பதன் மூலம் நீதிச் சேவையின் திறனையும் தரத்தையும் உயர்த்தல்

நீதிமன்றங்களில் சேவை செய்கின்ற நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்நிறுவனம் 2010 ஆம் ஆண்டில் பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள நீதிமன்றக் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டது. அதன்படி, இந்த பயிற்சி நிறுவனம் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக நீதித்துறையல்லாத அலுவலர்களுக்கு பல நிகழ்ச்சிகளை நடாத்தியது.

1. மனப்பாங்குகளையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல்
2. கடமைகளை விளங்கிக்கொள்வதற்கான விழிப்புணர்வு

3. நவீனமயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்பு
4. இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல்

**2015 ஜனவரி 01 இல் இருந்து 2015 டிசம்பர் 31 வரை பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.**

| தொ. இல. | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | அலுவலக உதவியாளர் | 07 | 157 |
| 02 | ஆளணி கோப்புக்களைப் பேணல் | 06 | 226 |
| 03 | பணம்செலுத்தும் முறை சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 06 | 209 |
| 04 | ஒழுக்காற்று நடவடிக்கை சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 09 | 318 |
| 05 | சுருக்கெழுத்தாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி | 04 | 85 |
| 06 | பண்டசாலை கணக்கெடுப்பு சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 07 | 247 |
| 07 | சம்பள அளவுத்திட்டம் தயாரித்தல் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 07 | 238 |
| 08 | பெறுகை சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 06 | 201 |
| 09 | மனிதவள அபிவிருத்தி சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 05 | 183 |
| 10 | அலுவலக நடைமுறைகள் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 04 | 147 |
| 11 | குற்றவியல் நடைமுறை சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 01 | 35 |
| 12 | குடியியல் நடைமுறை சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சி | 02 | 74 |
| 13 | மொழி பயிற்சி நிகழ்ச்சி (தமிழ் & ஆங்கிலம்) 6 மாதப் பயிற்சிநெறி டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டது | 02 | 80 |

## 6.11 மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை

**நோக்கு**

- நாட்டில் சிறப்பாக முகாமை செய்யப்படுகின்ற நியதிச்சட்ட சபையாக மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச்சபையை அபிவிருத்தி செய்வதாகும்.

**செயற்பணிகள்**

- நீதி மற்றும் சட்ட தொழில்துறையில் ஈடுபட்டுள்ள யாவருக்கும் தற்போதிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துகின்றமையால் அவற்றைப் பராமரித்து மேலும் விருத்தி செய்து அவர்களுக்கேற்ற சூழலை வழங்கலாம் என்பதோடு அது அவர்கள் சேவை வழங்கக்கூடிய வழக்குத் தொடுனர்கள், மற்றும் அத்துடன் தொடர்புடையவர்களுக்கு செயற்திறனானதும், நியாயமானதும் நீதியானதுமான சேவையை வழங்கும் நோக்கத்தோடு அவர்களின் செயற்பாடுகளைப் புரிவதற்கும் உதவியாக இருக்கும் என்பதோடு அதன் மூலம் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளல்.

1987ம் ஆண்டின் 50ம் இலக்க மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபை சட்டத்தின் பிரகாரம் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதியையும் அதன் கட்டிடங்ளையும் பரிபாலித்து கட்டுக்கோப்போடு நிர்வகித்து பராமரித்து மேலும் வசதி வாய்ப்புக்களை மேம்படுத்தவேண்டிய தேவை ஏற்படுமிடத்து உரிய மாற்றங்களையும், சீர் திருத்தங்களையும் மேலதிக மாற்றங்களையும் செய்யும் நோக்கில் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபை ஏற்படுத்தப்பட்டது.

நிர்வாக சபை பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.

- பிரதம நீதியரசர்
- பிரதம நீதியரசரினால் நியமனஞ் செய்யப்படும் உயர் நீதிமன்ற நீதியரசரொருவர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசரால் நியமனஞ் செய்யப்படும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரொருவர்
- நீதிஅமைச்சின் செயலாளர்
- உள்ளூராட்சி, வீடமைப்பு, கட்டிட நிர்மாண அமைச்சின் செயலாளர்
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்
- கொழும்பு மாநகரசபை ஆணையாளர்
- நிதி அமைச்சரின் பிரதிநிதி
- அதிமேதகு இலங்கை சனாதிபதியால் நியமிக்கப்படும் இரு அங்கத்தவர்கள்.

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபையால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு

- மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபையால் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதியின் சகல பராமரிப்பு வேலைகள், பாதுகாப்பு சேவைகள் மற்றும் நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களுக்குத் தேவையான பாதுகாப்பளித்தல் போன்ற அலுவல்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலம், அலுவலர்களின் விடுதி மற்றும் நிறுவனத்தைச் சேர்ந்த கட்டிடங்களின் திருத்த வேலைகள்.
- குடியியல் மேன்முறையீட்டு மேல் நிதிமன்றத்தில் அலுமினியம் பயன்படுத்தி அலுவலக அறைகளைத் தயார் செய்தல் மற்றும் கூறுபடுத்தல்.
- 211 ம் இலக்கக் கட்டிடத்தில் கீழ் தளத்திலுள்ள பெண்கள் கழிப்பறையை பழுதுபாத்தல், அதே கட்டிடத்தில் மரக் கதவுகள் மற்றும் யன்னல்களைத் திருத்துதல் மற்றும் அக் கட்டிடத்திலிருக்கும் தண்ணீர்த்தாங்கியை அப்புறப்படுத்தி புதிய தாங்கியோனறை பொருத்துதல்.
- நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களை பழுதுபாத்தல் மற்றும் வழியில் மின்குமிழ்களைப் பொருத்துதல்.
- மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அலுமினியம் பயன்படுத்தி அலுவலக அறைகளைத் கூறுபடுத்தல்.
- நிதிபதிகளின் ஓய்வறையில் நாற்காலிகளைப் பழுதுபார்த்தல்
- மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபையின் பாவனைக்கு பொறித்தொகுதிகள், இயந்திரங்கள், உபகரணங்கள், பொருத்துக்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் என்பனவற்றை கோள்வனவு செய்தல்.

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 166,719,000 | 154,619,000 |
| மூலதன செலவினம் | 32,000,000 | 6,709,000 |
| **மொத்தம்** | **198,719,000** | **161,328,000** |

# 07 நீதிமன்றங்கள்

இவ் அமைச்சின் கீழ் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகளில் பின்வரும் நீதிமன்றங்கள் உள்ளடங்குகின்றன.

- *உயர் நீதிமன்றம்*
- *மேன்முறையீட்டு நீதிமன்றம்*
- *மேல் நீதிமன்றங்கள்*
- *மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள்*
- *மாவட்ட நீதிமன்றங்கள்*
- *நீதிவான் நீதிமன்றங்கள்*
- *தொழில் நியாய சபைகள்*
- *காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்*

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், 20 மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், வர்த்தக மேல் நீதிமன்றம், 31 மேல் நீதிமன்றங்கள், 51 மாவட்ட/ நீதிவான் நீதிமன்றங்கள், 31 மாவட்ட நீதிமன்றங்கள், 49 நீதிவான் நீதிமன்றங்கள், 2 சிறுவர் நீதிவான் நீதிமன்றங்கள் 26 சுற்று நீதிவான் நீதிமன்றங்கள், 37 தொழில் நியாய சபைகள் 65 காதி நீதிமன்றங்கள் மற்றும் ஒரு காதி மேன்முறையீட்டு சபை தொடர்பிலான கணக்குப் பொறுப்புக்கள் அமைச்சினால் கையாளப்படுகின்றன. செலவினங்கள் 24 மேல் நீதிமன்ற கணக்கீட்டு நிலையங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

## 7.1 உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

இலங்கை நீதிமுறைமையில் அதியுயர்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் கௌரவ பிரதம நீதியரசர் உட்பட 11 உயர்நீதிமன்ற நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திடம் கிடைக்கப்பெறும் எல்லா விண்ணப்பங்களையும் விசாரிக்கின்றனர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் மூலம் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பின்வருமாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய நியாயாதிக்கம்
- அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கம்
- இறுதி மேன்முறையிட்டு நியாயாதிக்கம்
- மதியுரை நியாயாதிக்கம்
- தேர்தல்கள் மனுக்கள் (சனாதிபதி தேர்தல்) பற்றிய நியாயாதிக்கம்
- எந்தவகையினதும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறல் பற்றிய நியாயாதிக்கம்
- பாராளுமன்ற சட்டத்தால் விதிக்கக்கூடிய பிற விடயங்கள் பற்றிய நியாயாதிக்கம்

உயர் நீதிமன்றம் அதன் செயல்பாடுகளை முன்னெடுக்க உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் உதவுகிறது. இதற்கான நிதியை நீதி அமைச்சு செலவினத்தலைப்பு 234 இன் மூலம் வழங்குகிறது. உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் பணிகளாவன:

- உயர் நீதிமன்றப் பதிவுகளைப் பராமரித்தல்.
- அமர்வுகள் மற்றும் விண்ணப்ப அட்டவணைகளை ஒழுங்கு செய்தல்.
- நீதிமன்ற உத்தரவுகளையும் தீர்ப்புகளையும் பதிவு செய்தல்.
- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளை அனுமதித்தல்

- மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் வழக்கேடுகளைத் தயாரித்தலும் சட்ட செலவுகளை மதிப்பீடு செய்தலும்.

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| வகை | 2015/01/01 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2015/12/31 இல் உள்ள பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 2015/12/31 இல் உள்ள மொத்த வழக்குகள் | அனுமதியளிக்கப்பட்ட வழக்குகள் | 2015/12/31 இல் முடித்துக் கொள்ளப்பட்ட வழக்குகள் | 2015/12/31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் | 738 | 474 | 1,212 | 27 | 239 | 946 |
| விசேட அனுமதி விண்ணப்பங்கள் | 336 | 280 | 616 | - | 85 | 531 |
| பாராளுமன்ற சட்டமூலங்கள் பற்றிய உயர் நீதிமன்ற கட்டளைகள் | - | 22 | 22 | - | 22 | - |
| மேன்முறையீட்டு வழக்குகள் | 356 | 154 | 510 | - | 109 | 401 |
| உ.நீ வ.மே.நீ மேன்முறையீடு | 224 | 36 | 260 | - | 50 | 210 |
| மேல்நீதிமன்ற அனுமதி விண்ணப்பங்கள் | 146 | 77 | 223 | 14 | 47 | 162 |
| ஆணை விண்ணப்பங்கள் | 02 | 05 | 07 | - | 02 | 05 |
| மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் | 1,176 | 450 | 1,626 | 100 | 226 | 1,300 |
| மீளாய்வு வழக்குகள் | 05 | 07 | 12 | - | 01 | 11 |
| அரசியல் யாப்பை வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பான வழக்குகள் | **01** | - | 01 | - | **-** | **01** |
| ஏனைய | 09 | 01 | 10 | - | 01 | 09 |
| TAB APPEL | - | 01 | 01 | - | - | 01 |
| SC Special | 13 | - | 13 | - | 01 | 12 |
| **மொத்தம்** | **3,006** | **1,507** | **4,513** | **141** | **783** | **3,589** |

**2015.01.01 தொடக்கம் 2015..31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்** (234-01-01)

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 85,740,000 | 76,243,772 |
| மூலதன செலவினம் | 9,500,000 | 4,792,298 |
| **மொத்தம்** | **95,240,000** | **81,036,020** |

## 7.2 மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

இலங்கை அரசியல் அமைப்பினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முதன்நிலை நீதிமன்றங்கள், தொழில்நியாய சபைகள் மற்றும் பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் தீர்ப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு நியாயாதிக்கம் உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைகள் பற்றிய நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரியதாகும். 2002 ஆம் ஆண்டின் 25ம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டம் மற்றும் 2000ம் ஆண்டின் 39ம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தின் கிழ் அச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு தேவையான கட்டளைகள் மற்றும் பணிப்புகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்குகிறது. தேர்தல் மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. எந்தவொரு முதன்நிலை நீதிமன்றத்தினதும் அல்லது தொழில்நியாய சபைகளினதும் அல்லது ஏதாவது பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் வழக்கு அறிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்கும் பரிசோதனை செய்வதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தத்துவமும் அதிகாரமும் உள்ளது.

**2015.01.01 முதல் 2015.12.31 வரையிலான வழக்கு விசாரணைகளின் செயலாற்றுகை**

| வழக்கு வகை | 2015/01/01 இல் நிலுவையி-லுள்ளவை | பதிவு செய்யப் பட்டவை | முடிவெடுக்கப் பட்டவை | 2015/12/31 இல் நிலுவையி-லுள்ளவை |
|---|---|---|---|---|
| ஆணை விண்ணப்பங்கள் | 1,203 | 561 | 340 | 1,424 |
| உயர்நீதிமன்ற மேன்முறையீடுகள் | 855<br>02 | 274<br>- | 254<br>- | 875<br>02 |
| மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடுகள் | 1,117 | 206 | 263 | 1,060 |
| குடியியல் மேன்முறையீடுகள் | 981 | - | 208 | 773 |
| மேல் நீதிமன்ற மீளாய்வு விண்ணப்பங்கள் | 282 | 172 | 143 | 311 |
| மீளாய்வு (குடியியல்) மற்றும் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் | 84 | 20 | 40 | 64 |
| ஏனைய விண்ணப்பங்கள் | 139 | 80 | 47 | 172 |
| **மொத்தம்** | **4,663** | **1,313** | **1,295** | **4,681** |

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம் (234-01-02)**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 59,760,000 | 53,845,620 |
| மூலதன செலவினம் | 1,500,000 | 1,021,121 |
| **மொத்தம்** | **61,260,000** | **54,866,741** |

## 7.3 காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்

இஸ்லாமிய மக்கள் தமது சம்பிரதாயத்தின்படி சட்ட அலுவல்களை மேற்கோள்ள ஏதுவாக காதி நீதிமன்றங்கள் 1951ம் ஆண்டு 13ம் இலக்க முஸ்லீம் திருமணப்பதிவு மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் 12 (1)ம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டன. காதி நிதிமன்றமொன்றின் மேன்முறையீட்டை விசாரிப்பதற்கு 5 முஸ்லிம்களைக் கொண்ட காதி மேன்முறையீட்டுச் சபை இயங்கிகிறது. காதி நீதிமன்றங்கள் மற்றும் காதி மேன்முறையீட்டுச் சபையின் நிர்வாக நடவடிக்கைகள் 2005.10.08 ஆம் திகதியின் வர்த்தமானப் பத்திரத்தின்மூலம் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சிடம் ஆற்றுப்படுத்தப்பட்டது. இதற்கு முன் இந்நடவடிக்கைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டன. தற்போது 65 காதி நீதிமன்றங்களும் ஒரு காதி மேன்முறையீட்டு சபையும் உள்ளன.

**நாடு பூராகவும் இயங்கும் காதி நீதிமன்றங்கள் பின்வருமாறு.**

| | | |
|---|---|---|
| அட்டாளைச்சேனை | கல்ப்பிட்டி | பொலன்னறுவை |
| அக்கறைப்பற்று | களுத்துறை | பொத்துவில் |
| அக்குரணை | கண்டி | புல்மோட்டை |
| அநுராதபுரம் | காத்தான்குடி (மண்முனைப்பற்று) | புத்தளம் & சிலாபம் |
| அவிஸாவளை | கேகாலை | இரத்தினபுரி |
| பதுளை | கிண்ணியா | அகதிகள் - (கல்பிட்டி/ புத்தளம்) |
| பலப்பிட்டிய & எல்பிட்டிய | குளியாபிட'டி | சாய்ந்தமருது |
| பேருவளை | குருநாகல் | சம்மாந்துறை |
| போரா சமூகம் | மாஹொ | தம்பலகாமம் & கந்தளாய் |
| பியகம | மன்னார் | தங்காலை |
| கொழும்பு கிழக்கு | மாத்தளை | திருகோணமலை |
| கொழும்பு வடக்கு | மாத்தறை | தும்பனை |
| கொழும்பு தெற்கு | மாவனல்லை | உடபலாத்த கம்பளை |
| கொழும்பு மேற்கு | மேமன் சமூகம் | உடதலாவின்ன |
| ஏறாவூர் | மொனராகலை | உடுநுவர |
| காலி | மூதூர் | வாழைச்சேனை |
| கம்பஹா (திகாரிய) | நாவலப்பிட்டி | வவுனியா |
| அம்பாந்தோட்டை | நீர்கொழும்பு | யட்டிநுவர |
| ஹாரிஸ்பத்துவ & பூஜாபிட்டிய | நிந்தவூர்பற்று | யாழ்ப்பாணம் |
| ஹற்றன் | நுவரெலியா | |
| ஹோரன | ஓட்டமாவடி | |
| இறக்காமம் | பஹத்த-ஹேவாஹெட்ட | |
| கல்முனை | பாணந்துறை | |

**காதிமேன்முறையீட்டு சபையின் முன்னேற்றம் (2011-2015)**

| ஆண்டு | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011 | 160 | 48 | 112 |
| 2012 | 206 | 69 | 137 |
| 2013 | 219 | 65 | 154 |
| 2014 | 244 | 60 | 184 |
| 2015 | 226 | 112 | 154 |

**காதி நீதிமன்றங்களின் முன்னேற்றம் (2011-2015)**

| ஆண்டு | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011 | 10,554 | 5,786 | 4,768 |
| 2012 | 13,226 | 8,651 | 4,575 |
| 2013 | 12,735 | 7,660 | 5,075 |
| 2014 | 13,479 | 8,479 | 5,005 |
| 2015 | 12,042 | 7,032 | 5,010 |

- வெள்ளைமணல் காதி நீதிமன்ற நிர்மாண வேலை பூர்த்தியாக்கப்பட்டுள்ளது
- சாய்ந்தமருது காதி நீதிமன்ற நிர்மாண வேலை நடைபெறுகிறது

# 8 தொடர்புடைய நிறுவனங்கள்

## 8.1 இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

இலங்கை நீதிபதிகள் நிறுவனமானது 1985ம் ஆண்டு 46ம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இந் நிறுவனம் கௌரவ பிரதம நீதியரசர் மற்றும் அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்படும் இரு உயர்நீதிமன்ற நீதியரசர்களை உள்ளடக்கிய 5 உறுப்பினர்களைக்கொண்ட முகாமையாளர் சபையினால் நிருவகிக்கப்படுகிறது. இந் நிறுவனத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கங்கள் அமைச்சினால் ஒதுக்கப்படுகிறது. .

**விடயங்களும் பணிகளும்**

I. நீதித்துறை அலுவலர்களுக்கு நீதித்துறை மற்றும் சட்டம் சம்பந்தமாக தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு வசதி செய்தல்.
II. நீதித்துறை அலுவலர்கள் தமது தொழில்சார் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்கும் தமது அறிவையும் திறமைகளையும் விருத்திசெய்வதற்கும் கூட்டங்கள், மகாநாடுகள், விரிவுரைகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்குசெய்தல்.
III. நீதி நிருவாகம் சம்பந்தமான பலதரப்பட்ட விடயங்களில் ஆராய்ச்சிப் பாடநெறிகளை நடாத்துவதுடன் நீதித்துறை அலுவலர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் கல்வி சம்பந்தமான பொருட்களை வழங்குதல்.

**2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 22,000,000 | 12,450,000 |
| மூலதன செலவினம் | 7,000,000 | 3,910,000 |
| **மொத்தம்** | **29,000,000** | **16,360,000** |

**2015.01.01 முதல் 2015.08.31 வரையான முன்னேற்றம்**

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை | நீதிபதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| டீ.என்.ஏ பகுப்பாய்வின் போது அரச பகுப்பாய்வாளர்களின் பொறுப்புக்கள் | 02 | 99 |
| 1996 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க தூதுவர் சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்ற விதமாக சேவையை முடித்துக் கொள்ளுதல் | 01 | 31 |
| சுடுபடைக்கல சாட்சிகள் | 02 | 79 |
| ஆட்சேபனைக்குரிய ஆவணங்கள் பரிசோதனை | 02 | 79 |
| இணையத்தள மற்றும் இலத்திரனீயல் கொடுக்கல் வாங்கலின் சட்டரீதியான தொழில்நுட்ப சிக்கல்கள் | 02 | 75 |
| கடல்சார்ந்த சட்டம் | 01 | 54 |
| பிரிவிடல் சட்டம் பற்றிய மாநாடு | 10 | 505 |
| தொழில்நியாய சபை மேன்முறையீட்டில் தீர்ப்பு எழுதுதல் | 01 | 60 |

**நீதிபதிகளுக்காக நடாத்தப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | நிறுவனத்தின் பெயர் | நீதிபதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பயிற்சி கற்கைநெறி | நீதி கல்வி நிறுவனம், புதுடில்லி | 29 |
| பயிற்சி கற்கைநெறி | தேசிய நீதி கல்வி நிறுவனம், போபால் | 90 |
| பயிற்சி கற்கைநெறி | நீதிமன்ற மற்றும் சட்ட பயிற்சி நிறுவனம்- மலேசியா | 62 |

1. சாரதி, செயலாளர், 2 சிற்றூழியர், இல்லப் பராமரிப்பாளர் மற்றும் 2 தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோர் ஆட்சேரப்புச் செய்யப்பட்டனர்.
2. நீதிமன்ற பதிவாளர்களுக்கென 03 பயிற்சி பட்டறைகள் நடாத்தப்பட்டன.
3. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நீதிபதிகள் 52 பேரின் பங்குபற்றுதலுடன் கணணி குற்றங்கள் மற்றும் இலத்திரனியல் சாட்சியங்கள் பற்றிய பட்டறையொன்று தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடாத்தப்பட்டது.
4. கேட்போர்கூடத்திற்காக செவிப்புல உபகரணங்கள் மற்றும் பிற வசதிகளை வழங்குதல்.
5. நீதிபதிகளின் உபயோகத்திற்காக ‘‘மனுபுத்திர சட்ட தரவு’’ தளத்தை புதுப்பித்தல்.
6. நுலகத்திற்காக எல்லா இங்கிலாந்து சட்ட அறிக்கைகளும் கொள்வளவு செய்யப்பட்டது.
7. பின்வருமாறு பணியாற்றொகுதிக்கு ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டன. மதியுரையாளர்கள் 02, நூலகர் 01
8. நீதிபதிகளின் நாளேட்டை நாளதுவரை சீராக்குவதற்காக குழுவொன்றை நியமிக்கப்பட்டது.
9. சாட்சி சட்டம் பற்றிய நீதிபதிகள் கைநூலை நாளதுவரை சீராக்குவதற்காக குழுவொன்றை நியமிக்கப்பட்டது.

## 8.2 இலங்கைச் சட்டக்கல்லூரி

1900ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க சட்டக் கல்விப் பேரவை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கைச் சட்டக்கல்லூரியின் முகாமைத்துவத்தை, சட்டக் கல்விப் பேரவை கொண்டுள்ளது. சட்டக் கல்விப்பேரவை, பிரதம நீதியரசர் (தலைவர்), இரண்டு உயர் நீதிமன்ற நீதியரசர்கள், சட்ட மாஅதிபர், மன்றாடியார், நீதி அமைச்சின் செயலாளர், சட்டத்தரணிகள் சங்கத்தினால் முன்மொழியப்பட்ட இரண்டு அங்கத்தவர்கள் நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஆறு அங்கத்தவர்கள் ஆகியோர்களினால் அமையப்பெற்றுள்ளது.

மூன்று வருட கால பாடத்திட்டத்தை சட்டக்கல்லூரி கொண்டுள்ளது. இந்தப் பரீட்சைகளை நிறைவு செய்ததன் பின்னர் இவர்கள், குறைந்தது எட்டு வருட கால அனுபவத்தினைக் கொண்ட சட்டத்தரணி ஒருவரிடத்தில் ஆறு மாத காலம் பயிலுனராக சேவை செய்தல் வேண்டும். இதன் பிறகு இவர்கள் சட்டத்தரணிகளாக நியமிக்கப்படுவதற்குத் தகுதி பெறுவர்.

இலங்கை சட்டக் கல்லூரி ஒரு சுயவருமான தாபனமாகும். மிகவும் திறமை வாய்ந்த விரிவுரையாளர்களினால் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.

**01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரையிலான முன்னேற்றம்**

2015ம் வருட ஏப்ரல் மாத பரீட்சைக்கும் அக்டோபர் மாத பரீட்சைக்கும் முறையே 1008 பரீட்சார்த்திகளும், 2201 பரீட்சார்த்திகளும் தோற்றினர்.

சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் சட்டக்கல்லூரிகது 1036 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2015ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சட்டக்கல்லூரி நுழைவுப்பரீட்சைக்கு 4718 பேர் தோற்றியதோடு சித்தியடைந்த 213 பேர் மாணவர்களாக அனுமதிக்கப்பட்டுள்ளனர